Bro. S. Rajanayagam
St. Francis Xavier's Seminar

# இறையியல் கோலங்கள்

காலாண்டு வெளியீடு

# IRAI – IYAL KOLANGAL

**Tamil Theological Quarterly**

வடிவம் : 11

வண்ணம் : 01

புரட்டாதி, 1998

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி

கொழும்புத்துறை

யாழ்ப்பாணம்

இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர்:**

அருட்திரு. யே. நீக்கிலஸ்

**துணை ஆசிரியர்கள்:**

அருட்திரு. எஸ். வி. பி. மங்களராஜா
அருட்சகோ. எஸ். வசந்தகுமார்
அருட்சகோ. எஸ். ஏ. றொஷான்
அருட்சகோ. எஸ். லியோ ஆம்ஸரோங்
அருட்சகோ. ஏ. றொபின்சன் யோசவ்

**விநியோகம்:**

அருட்சகோ. எஸ். றோய் பேடினன்ட்
அருட்சகோ. எம். பத்திநாதர்

**வெளியீடு:**

**புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி**
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

(தனிப்பட்ட விநியோகத்திற்கு மட்டும்)

*Editor*

**Rev. Fr. J. Nicholas**

*Sub–Editors :*

**Rev, Fr. S. V. B. Mangalarajah**
**Bro. S. Vasanthakumar**
**Bro. S. A. Roshan**
**Bro. S. Leo Armstrong**
**Bro A. Robinson Joseph**

*Distribution*:

**Bro. S. Roy Ferdinand**
**Bro. M. Pathinathar**

*Publication*:

**St. Francis Xavier's Seminary**
**Columbuthurai**
**Jaffna**
**Sri Lanka**

(*For private circulation only*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை இயல் கோலங்கள்

## முன்னுரை ( Editorial )

நான்கு ஆண்டு கால இடைவெளியின் பின் மீண்டும் இறை இயல் கோலங்கள் வெளிவருது எம் அனைவருக்கும் ஒரு மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும். முன்னை நாள் குருமட அதிபரும், இவ்விதழின் ஆசிரியருமான அருள்திரு எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரின் அயராத முயற்சியால் இச் சஞ்சிகை சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. ஆனால் போரினால் ஏற்பட்ட தாக்கங்களும், குறிப்பாக இடம் பெயர்வினால் சந்தித்த இழப்புக்களும் எமது சஞ்சிகையின் தொடர்பான வெளியீட்டுக்கு நேரிட்ட தடைகள் என்பதை நாம் கூறாமலே நீங்கள் அறிவீர்கள். இச் சஞ்சிகை புத்துயிர் பெற மீண்டும் பொருள் உதவி புரிந்த மிஸ்ஸியோ (Missio Aachen - Germany) நிறுவனத்திற்கு நாம் என்றும் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

2000ம் ஆண்டு யூபிலிக்கு ஆயத்தமாகும் இக்காலத்திலே தூய ஆவியின் துணையை நாம் நாடி நிற்பது மிக அவசியம் என்பதை திருச்சபையானது நன்கு உணர்ந்துள்ளது. புதுப்பித்தலின் ஊற்றாகிய தூய ஆவி பற்றி சிந்திப்பது இன்று பொருத்தமானதொன்றாகும்.

தூய ஆவியின் செயற்பாட்டை பல்வேறு கோணங்களிலே சிந்திக்கக்கூடியதாய் இவ்விதழின் கட்டுரைகள் அமைந்துள்ளன. நாம் எதிர்கொள்ளும் யூபிலி ஆண்டு புதுப்பித்தலுக்கான புதிய சிந்தனைக்கு எம்மை தூண்டி நிற்க தூய ஆவியினால் புதுப்படைப்பாகி புதுவாழ்வுக்கு வழிகாட்ட இச்சிறப்பிதழ் துணை நிற்பதாக.

அருள்திரு ஜே. நீக்கிலஸ்
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட இயேசு

## அறிமுகம்

உண்மைத்தொண்டன் என்பவன் தன் தலைவனின் உணர்வையும், இலட்சியத்தாகத்தையும் தன்னில் கொண்டவனே. கிறிஸ்தவர்களான நாம் எல்லோரும், நம் தலைவனான இயேசுவின் தொண்டர்கள். எனவே நம் தலைவனின் உயிர்மூச்சும், உணர்வும், இலட்சியமும் நம்மில் இருக்கவேண்டும். தலைவனை வழிநடத்திய உயிர்மூச்சும் உணர்வும், சக்தியும் தூய ஆவியானவரே. நம் தலைவனான இயேசுக்கிறிஸ்துவை ஆட்கொண்ட தூய ஆவியானவரைப் பற்றி ஆராய்கின்றபோது, இதே தூயஆவி தொண்டர்களான எம்மையும் ஆட்கொள்ள வேண்டும் என்ற தேவையை எவரும் மறுக்கமுடியாது.

> " கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும்
> இயேசு சபிக்கப்பட்டவர் " எனச் சொல்லமாட்டார்.
> தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர் அன்றி வேறு
> எவரும் " இயேசுவை ஆண்டவர் எனச்சொல்ல முடியாது "
> (1கொரி. 12 : 3)

இயேசுவின் இவ்வுலக வாழ்வு முழுவதும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டதாக விளங்கியது. " தூய ஆவி உம்மீது வரும் " (லூக். 1;35) என்ற வானதூதரின் மங்களவார்த்தையுடன் தொடங்கி " அவர்கள் மேல் ஊதி தூய ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் " (யோவான். 20 : 22) என்று அதே ஆவியை இயேசு திருச்சபைக்குப் பகிர்ந்தளித்தது ஈறாக, ஆவியானவர் இயேசுவில் செயலாற்றுவதும், இயேசு ஆவியில் தங்கியிருப்பதுமான நெருக்கம் எல்லா நற்செய்திகளிலும் காட்டப்படுகின்றது.

மீட்புத்திட்டத்தின் சம்பவங்கள் இயேசுவில் நிறைவேறின. இதற்கு தூய ஆவியின் பங்களிப்பும், வழிநடத்தலும் வெளிப்படையாகக் காட்டப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயேசுவின் மனித அவதாரம் — தூயஆவியால் இயேசு கருவானார்.

இயேசு கருவில் உருவான முதல் நொடியில் இருந்தே அவரோடு ஆவியானவர் இருக்கிறார். இயேசுவின் மகன் தன்மையும், தந்தைக்கு அவர் கீழ்ப்படிகின்றமையும் ஒன்றை ஒன்று நிறைவு செய்பவை. ஏனெனில் உண்மையான மகன் என்பவன் தன் தந்தைக்கு முற்றிலும் கீழ்ப்படிகின்றவனே. தந்தையின் மீட்புத்திட்டத்திற்கு முற்றிலும் உடன்பட்ட இயேசு, தன்னை வெறுமையாக்கி, மனிதனாக மாறுகின்றார். இந்த வெறுமையாக்கலையும், மனிதனாவதையும் மனித அவதாரத்தில் செயற்படுத்துபவர் தூய ஆவியே. வேறுவார்த்தைகளில் கூறுவதானால் இயேசு மனிதனாகச் சம்மதிப்பதன் மூலம் தனது மகன் தன்மையை நிரூபிக்கின்றார். இயேசுவை இறைமகனாக அமைத்து உருவாக்குபவராக தூயஆவி இருக்கின்றார்.

இவ்வாறு இயேசுவின் முதல் நொடியில் இருந்தே அவருக்கு இருப்புக் கொடுப்பவராக தூய ஆவி செயற்படுகின்றார். இயேசுவின் குழந்தைப் பருவத்தைக் குறிப்பிடும் இரு நற்செய்திகளும் இந்த தொடக்கச் செயலைக் கோடிட்டுக் காட்டுகின்றன. (மத். 1 : 20 லூக். 1 ; 35)

## இயேசுவின் திருமுழுக்கும், பணித்தொடக்கமும் தூய ஆவியின் வெளிப்படையான பொழிவு

இயேசுவிலே ஆவியானவரின் பிரசன்னம் அவர் திருமுழுக்குப் பெறும்போது வெளிப்படையாக அறிவிக்கப்படுகின்றது. திருமுழுக்கு அருளப்பர் மக்களுக்கு யோர்தான் நதியிலே திருமுழுக்காட்டும் போது "நீங்கள் மனம் மாறுவதற்காக நான் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுக்கின்றேன். எனக்குப் பின் வருபவர் ......... தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுப்பார்." (மத். 3:11) என்று வெளிப்படையாகச் சொன்னார். இயேசுவினால் மாற்றப்படப் போவதாய் திருமுழுக்கு அருளப்பர் கருதிய பழைய மனமாற்றத்தின் அடையாளமான நீர்முழுக்கு இயேசுவுக்கு ஆவியை வெளிப்படையாகப் பொழியும் ஆவி முழுக்காக மாறுகின்றது. (லூக். 3 : 22 )

இயேசுவின் திருமுழுக்கில் தூயஆவி வெளிப்படையாகப் பொழியப்பட்டாலும், ஒரு மௌன சாட்சியாகவே இருக்கின்றார். தந்தை-மகன் உரையாடலுக்கும், அவர்களது ஒன்றிப்பிற்கும் சான்று பகர்கின்றார். இது திரித்துவத்தில் ஆவியானவரின் இயல்பையும், நிலையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சுட்டிக்காட்டுகின்றது. தூய ஆவியானவர் தந்தையிடமிருந்தும், மகனிடமிருந்தும் புறப்படுகின்றவர். தந்தை - மகன் இருவழி அன்பின் வெளிப்பாடே தூய ஆவி. எனவே இயேசுவின் திருமுழுக்கின் போது நிகழ்ந்த திரித்துவ வெளிப்பாட்டிலும் ஆவியானவர் உடனிருக்கின்றார்.

இயேசுவைப்போன்று சாதாரணமான ஒருவராகத்தான் ஆவியானவரும் காட்டப்படுகின்றார். அவருக்குக் கொடுக்கப்பட்ட அடையாளமான புறா ஒரு சாதாரண, ஆடம்பரமில்லாத பறவை. இயேசுவினது அடையாளமான செம்மறியும் ஒரு சாதாரண அமைதியான பிராணியே.

இவ்வாறு தூய ஆவி தனது சாதாரண, ஆரவாரமெதுவுமில்லாத மௌனப் பிரசன்னத்தோடுதான் இயேசுவை அவரது பணிக்களத்திற்கு இட்டுச் செல்லுகின்றார். எனவே ஆவியின் அருட்பொழிவான திருமுழுக்கு ஓர் அடக்கமான ஆரம்பம் - ஆடம்பரமில்லாத அபிஷேகச் சடங்கு. இயேசு ஓர் அடக்கமான பணியாள் (செம்மறி). ஆவி ஒரு மௌனப்பிரசன்னத்துணை. (புறா)

ஒத்தமை நற்செய்திகளில் இயேசுவின் திருமுழுக்கைத் தொடர்ந்து, அவரது சோதனைக்கும் ஆவியே அழைத்துச் செல்வதாகக் காட்டப்படுகின்றது. (லூக் 4:1) இந்த பாலைவனச் சோதனை திருமுழுக்கை அடுத்து நடக்கும் ஒரு புடமிடப்படும் சடங்கு. "இவரே என் அன்பார்ந்த மகன்" என்ற கடவுளின் பெருமிதம் பொய்யானதல்ல என்று எண்பிக்க ஆவியானவர் நடத்தும் ஒரு நாடகம் என்று கூடச் இதனை வர்ணிக்கலாம். இயேசுவினது அழைப்பு பாலைவனத்தில் பரிசோதிக்கப்படுகின்றது. சோதனைகளை வென்ற இயேசு ஆவியின் வல்லமை பூண்டவராய் கலிலேயாவிற்குத் திரும்பி பணிவாழ்வை ஆரம்பிக்கின்றார். (லூக் 4 : 14) தூய ஆவி பெற்ற ஒருவரை தீய ஆவிகளோ, மனித ஆவிகளோ எதுவும் ஒன்றும் செய்ய முடியாது.

## இயேசுவின் பணி (போதனையும் சாதனையும்) ஆவியானவரில் இயேசு செயலாற்றுகிறார்.

தமது போதனையிலும், சாதனையிலும் தம்மில் தூய ஆவியானவர் செயலாற்றுவதையும், உடனிருப்பதையும் இயேசு வெளிப்படுத்துகின்றார். இயேசுவின் வாழ்வு, பணி அனைத்தும் ஆவியினுடையதே என விளக்க, லூக்காஸ் இயேசுவின் பணிப்புரையில் ஆரம்பத்திலேயே "ஆண்டவரின் ஆவி என்மேல் உள்ளது" என்ற பழைய ஆகம வார்த்தைகளைக் கோடிட்டுக் காட்டுகிறார். (லூக். 4 : 18-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிலே ஆவியைக் கொண்டிருந்த இயேசு அதன் கனிகளை மற்றவர்களுக்கும் வழங்கினார். அவர் நற்செய்தியையும், இறை வார்த்தையையும் ஏழைகளுக்கு வழங்கினார். பாவிகள், விலைமாதர், ஆயக்காரர் மற்றும் சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டோருடன் உறவு கொண்டார். தந்தையோடும், தூய ஆவியோடும் மக்கள் கொள்ளும் உறவுக்கு தீய ஆவிகள் தடையாக இருப்பதை உணர்ந்து இயேசு, பேய்களை ஆவியால் ஒட்டினார். (மத். 12 : 28)

இயேசு இந்த ஆவியானவரில்தான் அக்களிப்புடன் தந்தையை அணுகுகின்றார். (லூக். 10 : 21) தீமைமீதும், சாவின்மீதும், இயற்கை மீதும் வெற்றிகொள்ளும் அவரது புதுமைகளும், "உண்மைக்கு சாட்சியம் பகரும்" அவரது போதனைகளும், அவரது இறைத் தொடர்பும், மற்ற மனிதர்களுடனான தொடர்புகள் அத்தனையுமே, அவர்மேல் ஆவியானவர் தங்கியுள்ளார் என்பதற்கும், அவரே எதிர்பார்க்கப்பட்டவர் என்பதற்கும், சான்று பகர்கின்றன.

இயேசுவின் மீது இந்த ஆவியின் பிரசன்னம் நீடித்திட தொடர்ந்த பிரசன்னமாகக் காட்டப்படுகின்றது. பழைய ஏற்பாட்டில் இறைவாக்கினரும் ஏனைய தலைவர்களும் ஆவியைப் பெற்றுச் செயற்பட்டார்கள். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்கு, குறிப்பிட்ட பணியைச் செய்வதற்கு மட்டுமே இந்த ஆவியின் பொழிவு இருந்தது. ஆனால் இயேசுவில் ஆவியானவர் தொடர்ந்தும் எல்லா வேளைகளிலும் எல்லா அம்சங்களிலும் ஊடுருவியிருந்தார். (யோவான் 3 : 34)

## தூய ஆவியை இயேசு விளக்குகிறார் – தூய ஆவியை விளக்க இயேசுவால் பயன்படுத்தப்பட்ட உருவகங்கள்.

யோவான் நற்செய்தியில் காற்று *(3:8)* மீண்டும் பிறத்தல் *(3:5)*, நீர் *(7:38)*, துணையாளர் (16:7), போன்ற வார்த்தைப் பிரயோகங்களினூடாக தூய ஆவியானவர் விளக்கப்பட்டிருக்கிறார். திருத்தூதர் பணியில் நெருப்பு வடிவமாக தூய ஆவி இறங்கி வந்ததாகக் கூறப்படுகின்றது. *(2:3)* ஒத்தமை நற்செய்திகளில் தூயஆவி புறா வடிவமாக இறங்கியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. (மத். 3 : 13-17, மாற். 1 : 9 -11, லூக். 3 : 21-22) இந்த உருவகங்கள், விளக்கங்கள் மூலமாக தூய ஆவியாரின் பண்புகள், செயற்பாடுகள், அவருக்கும் இயேசுவுக்குமுள்ள தொடர்புகள் விளக்கப்படுகின்றன.

## ஆவியானவரை அனுப்புவதாக இயேசு வாக்களிக்கின்றார்.

இயேசு சீடர்களை தற்காலிகமாகப் பணிக்கு அனுப்பிய போதும் (மத்.10:20), சாவினால் அவர்களை விட்டு நிரந்தரமாகப் பிரியும் முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பும் (யோவான் 14:16) தூய ஆவியைப்பற்றி அவர்களிடம் பேசுகிறார். ஒத்தமை நற்செய்திகளில் இக்கட்டு வேளைகளிலும், கலாபனைகள், நீதிமன்றங்கள் போன்ற முக்கிய கட்டங்களில் ஆவி தம்மை வெளிக் காட்டுகிறார் எனக் கூறப்படுகின்றது. (மாற். 13:11) ஆனால் யோவான் நற்செய்தியில் இறுதி இரவுணவின் பின் இயேசுவின் உரையில் ஆவியின் தொடர்ந்த பிரசன்னமும் ஆதரவும் உறுதிப்படுத்தப்படுகின்றது. (யோவான் 15 : 18-27, 14 : 16, 16 : 13) இயேசு தமது ஆவியை தம்மை நெறிப்படுத்துகின்ற அதே ஆவியை - சீடர்களுக்கும், திருச்சபைக்கும் வாக்களிக்கின்றார்.

## தூய ஆவியும் இயேசுவின் இறுதி நிகழ்வுகளும்

இயேசு ஒரு கோழையாக இறக்கவில்லை. வீரனாக தாமே விரும்பி தம்மை சாவுக்கு கையளிக்கிறார் என யோவான் நற்செய்தி கூறுகின்றது. "நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகத்தைவிட்டு தந்தையிடம் செல்கின்றேன்''. (16 : 28) "யாரைத் தேடுகிறீர்கள்'' (18 : 4). " தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்'' (19 : 30). ஆவியோடு துணிவாகத் தன் பகிரங்கப்பணியை ஆரம்பித்த இயேசு முடிவிலும் துணிவோடு தம் மரணத்தை எதிர்கொள்கிறார்.

இறந்து உயிர்த்த இயேசு தம் ஆவியானவரை தம் கொடையாகத் திருச்சபைக்குப் பொழிகிறார். (தி. தூ. பணி 2 : 4, 33) இந்த ஆவி இயேசுவின் ஆவியே. இவர்பணிகளைத் தொடர்ந்து ஆற்றுகிறார். ஆகவேதான் திருத்தூதர் பணிநூல் " ஆவியானவரின் நற்செய்தி " என அழைக்கப்படுகிறது.

## முடிவாக

இயேசுவின் இவ்வுலகவாழ்வு முழுவதும் ஆவியால் ஆட்கொள்ளப் பட்டதாக இருந்தது. அவரது பிறப்பில், பணியில், சோதனையில், சொல்லில், செயலில், செபத்தில், துன்பங்களில் புரியாத்தன்மைகளில், மரண வேதனையில் - இப்படி இயேசுவின் வாழ்வின் எல்லா நிலைகளிலும் தூய ஆவியின் உடனிருப்பு தெளிவாகப் புலப்படுகின்றது.

கிறிஸ்துவுடன் செயற்பட்ட அதே ஆவி இன்று கிறிஸ்தவனுடன் இருந்து செயற்படுகின்றார். "மண்ணுலகின் இறுதி எல்லை வரைக்கும் திருச்சபையை இட்டுச் செல்லும் " (தி. தூ. பணி. 1 : 8) அதே ஆவி இன்றும் ஒவ்வொரு கிறிஸ்தவனுடனும் இருக்கின்றார்.

இயேசு தூய ஆவியுடன் இருந்ததனால் எதுவும் அவரை அசைக்க முடியவில்லை. நானும் அதே ஆவியுடன் ஒத்துழைத்தால் எனது வாழ்விலும் அச்சம் எதுவுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணைநின்ற நூல்கள்


1. ஆசிரியப் பணி ஒரு வேள்வி,
   அவர் வளர்க நூல் வரிசை 13, திண்டிவனம், தமிழ்நாடு
   விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடு நிலையம், 1992.
2. ஆவியின் தரிசனம், உறுதி பூசுதல் ,
   மறைக்கல்வி நூல், TNBCLC, 1996.
3. விவிலியக் களஞ்சியம், I, சென்னை; தியான ஆச்சிரமம், 1991.
4. The New Dictionary of Theology, Bangalore : TPI, 1994.
5. Howard Marshall. The origins of New Testament Christology.
   London : Inter-Varsity Press, 1982.


அருள்திரு போல் றொகான்

# Jesus and the Holy Spirit

**Fr. J. C. Paul Rohan**


*Synopis*

*The plan of Salvation attained its fulfillment in Jesus Christ. The presence of the Holy Spirit in the life and mission of Jesus is evident. The Baptism of Jesus witnesses a clear outpouring of the Holy Spirit. The Holy Spirit is the expression of the love that is seen in the Father - Son relationship. It is again the Holy Spirit who Strengthened Jesus to fight against and to overcome the temptations in the desert. The Holy Spirit is present in all Jesus preaching and the wonderous deeds. The fruits of the Holy Spirit are ever seen in the actions and the interactions of Jesus. The same actions and the interactions oj Jesus prove the presence of the Holy Spirit in His life. Jesus promises His deiciples and the Church the same Holy Spirit. The Holy Spirit, who strengthens Jesus at the beginning of His public life, gives Jesus courage to willingly face death. The Same Spirit is given to each Christian. Following the footsteps of Jesus the Christian has to co-operate with the Spirit.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்த ஆவியும் திருச்சபையும்

## முகவுரை

திருச்சபையானது தூய ஆவியானவர் மீது கொண்ட விசுவாசத்தை கி.பி. 325 இல் நீசேயாவில் கூடிய (Nicaean council) முதலாவது பொதுச் சங்கத்திலும், கி. பி. 381 இல் கொன்ஸ்தாந்திநோபிளில் (Constantinople) கூடிய இரண்டாவது பொதுச்சங்கத்திலும் "தந்தையிடமிருந்தும் மகனிடமிருந்தும் புறப்படும் ஆண்டவரும் உயிரளிப்பவருமான தூய ஆவியானவரை விசுவசிக்கின்றேன். இவர் தந்தையோடும் மகனோடும் ஒன்றாக ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார்." என்னும் விசுவாச சத்தியம் பிரகடனப்படுத்தப்பட்டது.

தூய ஆவியானவர் தந்தையுடனும் மகனுடனும் இணையான இறைவனாய் ஒரே ஆராதனையும் மகிமையும் பெறுகின்றார் என்பதற்கு வேதாகமத்தில பல சான்றுகள் உள்ளன: எல்லா வல்லமையும் உடைய ஆவியானவர் (லூக் 1 : 35), எல்லாவற்றையும் அறியும் ஆவியானவர் (1 கொரி 2 : 10-11) இயேசு வாக்களித்த துணையாளராகிய ஆவி (யோ 16 : 7) திருச்சபையின் உயிர் மூச்சாக இயங்கும் ஆவி (1 கொரி 3 : 16).

வாக்குப்பண்ணப்பட்ட மீட்பராகிய இயேசுவின் வாழ்க்கை முழுவதும் ஆவியானவரின் செயற்பாட்டைக் காணலாம். இயேசு மரியாவின் வயிற்றில் கருவாக உருவானது (லூக் 1 : 35), யோர்தானில் திருமுழுக்குப் பெற்றபோது ஆவியால் நிரம்பப்பெற்றது (லூக் 3 : 21-22), நற்செய்தியைப் போதிக்க வல்லமை பெற்றது (லூக் 4 : 19) இவையனைத்தும் ஆவியின் வல்லமையால் நிறைவேறின.

## திருச்சபையின் ஆரம்பம்

இயேசு போதித்த இறையரசின் நற்செய்தியைச் செவிமடுத்து அவரைப்பின்பற்றிய சீடர்கள் ஒரு புதிய சமூகமாக உருவாகினர். பாவங்களை மன்னிக்கவும், தன் மந்தையாகிய திருச்சபையை வழிநடத்தவும் இயேசு அப்போஸ்தலர்களைப் பணித்தார். (மத் 16 : 18)

இயேசுவைப் பின்சென்ற பல சீடர்களிலிருந்து அவர் பன்னிருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குச் சிறப்பான பணியைக் கொடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். (யோ 20:21) தனது குருத்துவப் பணியிலும், போதிக்கும் பணியிலும், மேய்ப்புப் பணியிலும் அவர்கள் பங்கு பெறச் செய்தார். இயேசு சிலுவையில் மரித்தபோது சீடர்கள் ஒடி ஒழிந்து கொண்டனர். ஆனால் வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி என்னும் துணையாளர் சீடர்கள் மேல் இறங்கிய பொழுது திருச்சபையென்னும் சமூகம் உயிர் பெற்றது

## பரிசுத்த ஆவி திருச்சபையின் ஆன்மா

திருச்சபைக்கும் தூய ஆவிக்குமிடையேயுள்ள நெருக்கமான உறவு ஆரம்ப காலத்திலிருந்தே மிகத் தெளிவாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. திருச்சபை கிறிஸ்துவின் மறையுடலாகவும் பரிசுத்த ஆவியின் ஆலயமாகவும் திகழுகின்றது. (1) கொரி : 3:16; 2 கொரி 6 : 16) திருமுழுக்குப் பெற வேண்டியவர் விசுவசிக்க வேண்டிய மறையுண்மைகளில் பரிசுத்த ஆவியும் இடம் பெறவேண்டுமென்பதை புனித இப்பொலிற் கி.பி.(170-235) கூறியுள்ளார். (1) மனித உடலுக்கு ஆன்மாவைப்போல கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபைக்குப் பரிசுத்த ஆவி உள்ளார் என்று புனித அகுஸ்தீனார் (கி. பி. 354 - 430) கூறுகின்றார். கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் பரிசுத்த ஆவி ஆன்மாவாக இருந்து செயலாற்றுவதை 2ம் வத்திக்கான் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (2)

## திரித்துவத்தில் பரிசுத்த ஆவி

மீட்பு வரலாறு முழுவதிலுமே பரிசுத்த திரித்துவத்தின் மூன்று ஆட்களும் செயல்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. மீட்புப் பணியின் நிறைவேற்றத்தை மூன்று கட்டங்களாகப் புதிய மறைக்கல்வி நூல் விளக்கவுரை எடுத்துக் காட்டுகின்றது.

### 1. பழைய ஏற்பாட்டுக் காலம்

இறைவாக்கினர் வழியாகப் பேசி இஸ்ராயேல் மக்களில் மீட்பின் வாக்குறுதி நிறைவேறும் என்னும் நம்பிக்கையை ஊட்டியவர் பரிசுத்த ஆவி. காலம் கனிவுறும்போது கடவுள் தன் மெசியாவை அனுப்புவார். ஆண்டவரின் ஆவி அவர்மேல் தங்கியிருக்கும். (இசை 11 : 2)

### 2. புதிய ஏற்பாட்டுக் காலம்

காலம் நிறைவேறிய பொழுது கடவுள் தன் மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். ஆவியின் வல்லமையால் வார்த்தை மனுவுருவானார் (லூக் :1:35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. திருச்சபையின் காலம்

இறைமகனை மகிமைப்படுத்துவதும் மகனூடாக படைப்பு முழுவதையும் தந்தையிடம் இட்டுச் செல்வதும் ஆவியானவரின் பணியாகும். திருச்சபையானது ஆவியினால் உயிரூட்டம் பெறுவது வரலாறு எண்பிக்கும் உண்மையாகும். (3)

## திருச்சபையில் ஆவியானவரின் பணிகள்

திருச்சபையில் ஆவியானவரின் செயற்பாடு, ஏவுதல் வழிநடத்துதல் போன்றவை இல்லாமல் எதுவும் நடைபெற முடியாது. ஜெருசலேம் சங்கம் (திருத். பணி 15 : 28) இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. "திருச்சபை எங்கேயோ, ஆண்டவருடைய ஆவி அங்கேயுள்ளது. ஆண்டவருடைய ஆவி உள்ள இடங்களில் எல்லாவித அருளும் உண்டு." (4) இயேசுவின் மீது விசுவாசம் கொண்டு திருமுழுக்குப் பெற்றவர்கள் மீது பரிசுத்த ஆவி இறங்கினார். (திரு.பணி. 8:1). யூதர் மட்டுமல்லாது புறவினத்தாரும் மீட்படைய வேண்டுமென்று பேதுரு பரிசுத்த ஆவியால் தூண்டப்பெற்றார் (திரு. பணி. 10) திருச்சபையைத் துன்புறுத்திய சவுல் மனம்மாறி ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டார் (திரு. பணி 9). அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து மீட்புப்பணியைத் தொடர மூப்பர்களைப் பரிசுத்த ஆவி வழிநடத்தினார். (திரு.பணி. 20 : 28) மறையுண்மைகளை பரிசுத்த ஆவியானவர் சீடர்களுக்குத் தெளிவாக்குவார் (யோ 16 : 12-13)

## திரு நூல்

தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்ட திருநூல் புனிதமானதாகத் திருச்சபையால் மதிக்கப்படுகிறது. (5) திருச்சபையின் மறையுண்மைகள் வாய்மொழிப் பாரம்பரியத்தினூடாகவும் பரவி வந்துள்ளன. இப் பாரம்பரியத்திலும் ஆவியானவரின் வழிநடத்தல் முக்கிய பங்களிப்பாயுள்ளது. காலத்தின் தேவைக்கேற்ப மீட்பின் நற்செய்தி தெளிவாக்கப்படுவதற்கு ஆவியின் செயற்பாடு அவசியம் என்பதை இறையியல் வல்லுனர் இம்பெல்லி (Imbelli Robert) குறிப்பிட்டுள்ளார். (6) பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தை இறைவெளிப்பாடு என்னும்கொள்கைத் திரட்டும் தெளிவாகக் கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருச்சபையின் ஆசிரியம்

திருச்சபையின் ஆசிரியத்தை உற்றுநோக்கும்போது பரிசுத்த ஆவியின் வல்லமையால் அப்போஸ்தலர் போதனைப் பணியை மேற்கொண்டனர் என்பது தெளிவாகின்றது. இப்பணியானது அவர்களது வழித்தோன்றல்களுக்குக் கையளிக்கப்பட்டது. தூய ஆவி திருச்சபையை வழிநடத்துவது இயேசுவின் வாக்குறுதி நிறைவேறுவதாய் இருக்கின்றது. (யோ 16:13). இவ்வாறாக இறைவழிநடத்தலுக்குள்ளாகும் திருச்சபை தனது மறைக்கோட்பாடுகளை நிர்ணயிக்கும்போது தவற முடியாது. 2ம், 3ம் நூற்றாண்டுகளில் இறையூக்கம் பெற்ற புதிய ஏற்பாட்டு நூல்கள் எவையென்று பிரகடனப்படுத்துவதற்குப் பரிசுத்த ஆவி துணை செய்தாரென்றால் இக்காலத்தில் ஆவியானவர் திருச்சபையை மட்டுமல்ல ஆயர்களை வழிநடத்தி மறைக்கோட்பாடுகளை வகுத்து அவற்றைப் பிழையறக் கற்பிக்கும் பணியிலும் ஆயர்களுக்கு வழிகாட்டியிருக்க வேண்டும். (7) பல நூற்றாண்டுகளாகத் திருச்சபையின் ஆசிரியத்திற்குத் தூய ஆவியின் துணை இருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்தாலும் திருச்சபையின் வரலாற்றில் இதற்குப் பல எதிர்ப்புக்களும் தோன்றிய வண்ணமிருந்தன. இதனாலும் கிறிஸ்தவர்கள் ஏற்று நம்ப வேண்டிய மறையுண்மைகளை அவ்வப்போது பிரகடனப்படுத்திக் கிறிஸ்தவர்கள் அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்ள வகைசெய்யும்படியாக 1870ல் முதலாம் வத்திக்கான் சங்கத்தின் திருச்சபையின் வழுவாரம் எல்லாக் கத்தோலிக்கராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதாயிற்று. இவ்வழுவாவரம் திருச்சபையின் சரியான படிப்பினைகளைப் படிப்பிப்பதற்கும் அவற்றை ஏற்று விசுவசிப்பதற்கும் வழங்கப்படும் ஆவியின் கொடை என்று கொள்ள வேண்டும். (8)

## திருவருட்சாதனங்களில்

திருவருட்சாதனங்களில் ஆவியானவரின் செயற்பாடு பற்றிக் குறிப்பிடும்போது புதிய மறைக்கல்வி நூல் பின்வருமாறு கூறுகின்றது. திருவருட்சாதனங்கள் கிறிஸ்துவின் உடலிலிருந்து ஊற்றெடுக்கும் சக்திகளாகும். இவை என்றும் உயிருள்ள வாழ்வை வழங்கும் ஆற்றல் பெற்றவை. இவை கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையில் பரிசுத்த ஆவியின் செயற்பாடுகளாகும். (9) திருச்சபையின் திருவருட்சாதனங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாகத் தூய ஆவியானவர் மீட்பருடனும் அவரது மீட்புப் பணியுடனும் ஒரு உயிருட்டமுள்ளதும் பயன் தருவதுமான ஒரு தொடர்பை ஏற்படுத்துகின்றார் (10)

## செபத்தில்

ஆவியானவர் எங்களுக்காகப் பரிந்துரைப்பதுடன் எங்களுடன் செபிக்கின்றார், செபிக்கக்கற்றும் கொடுக்கின்றார். செபம் எங்கள் உள்ளங்களை இறைவனை நோக்கி எழுப்புவதாகும். இயேசு செபித்ததுடன் தனது சீடர்க்கு செபிக்கக் கற்றும் கொடுத்தார். திருச்சபையின் ஆரம்பமாகிய பெந்தக்கோஸ்தே செபத்துடனேயே ஆரம்பமானது. ஆவியின் வருகையை எதிர்நோக்கியிருந்த போது அவர்கள் செபத்தில் ஒன்றித்திருந்தனர் (திரு பணி. 1 : 14) ஆவியானவர் திருச்சபைக்கு அனைத்தையும் கற்றுக்கொடுத்து இயேசு சொன்னவற்றையெல்லாம் நினைவுபடுத்துவார் (யோ 14 : 26) என்பது ஆவியானவர் திருச்சபையை செப வாழ்வுக்குத் தயார் பண்ணுகிறார் என்று பொருள்படுகிறது (11) எமது செபத்தில் பரிசுத்த ஆவியின் பங்கு என்னவென்று புதிய மறைக்கல்வி நூல் மிகத் தெளிவாகக் கூறுகின்றது. எம்மை அபிஷேகம் செய்து முழுமையாக நிரப்பும் ஆவியானவர்தான் கிறிஸ்தவ செபத்தின் உந்துசக்தியாக உள்ளார். என்றும் உயிருட்டமுள்ள செபமரபின் காரணர் அவர்தான். எத்தனை பேர் உள்ளனரோ அத்தனை செபமுறைகளுள்ளன என்பது உண்மையாயினும் ஒரே ஆவியானவர்தான் எல்லோருக்குள்ளும், எல்லோருடனும் செயலாற்றுகிறார். தூய ஆவியுடன் கொள்ளும் உறவினால்தான் கிறிஸ்தவ செபம் திருச்சபையின் செபம் ஆகிறது. (12) ஆவியின் கொடைகளும் அவற்றிலிருந்து ஊற்றெடுக்கும் கனிகளும் ஒருங்கே கிறிஸ்தவ வாழ்க்கையின் உயிர்நாடியாயுள்ளது. ஆவியின் ஏழு கொடைகளிலிருந்து அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், விசுவாசம், சாந்தம், தன்னடக்கம் (கலா 5:22) என்னும் கனிகள் ஊற்றெடுக்கின்றன நல்ல மரத்தை அதன் கனிகளைக் கொண்டு அறிகிறோம். அது போன்று நாம் தூய ஆவியில் வாழ்கிறோம் என்பதை இந்த ஆவியின் கனிகளை நாம் எந்தளவிற்கு தருகிறோம் என்பதில் கணிக்கலாம். இந்த ஆவியின் கனிகளே திருச்சபையில் கிறிஸ்தவ வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்குகின்றன. (13)

மறைத் தூதுரைப் பணியில் ஆவியானவரே உண்மையான மறைத் தூதுரைப்பவர். மற்றவர்கள் அவரது கருவிகளே. பெந்தக்கோஸ்தே விழாவின் போது ஆவியின் வல்லமையோடு ஆரம்பித்த மறைத்தூது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைப்பணி என்றும் தொடர்கிறது. (14) இரண்டாம் வத்திக்கான் சங்கத்தையும் அதனைத் தொடர்ந்து அடிக்கடி வெளிவந்து கொண்டிருக்கும் திருத்தந்தையின் சுற்று மடல்களும் மறைத்தூதுரைப் பணியில் ஆவியானவரின் பங்கைத் தெளிவாக விளக்கிவந்துள்ளன.

மறைத்தூதுரைக்கு அத்தியாவசியமானது சாட்சிய வாழ்வு. பல்வேறு வாழ்க்கைச் சூழ்நிலைகளிலும் சாட்சிய வாழ்வு வாழும் வேதசாட்சிகள் போன்றோரின் பின்னணியில் இருப்பது ஆவியின் செயற்பாடே. (15) இது போன்று புனிதர்களின் சாட்சிய வாழ்வால் ஆவியின் புனிதத் தன்மை வெளிப்படுத்தப்பட்டு மீட்புப் பணி தொடர்கிறது.

## முடிவுரை

திருச்சபை வாழ்வதும், இயங்குவதும் தூய ஆவியால்தான். இதனால்தான் திருச்சபையின் ஆன்மாவாக இருந்து ஆவியானவர் செயற்படுவதை உணரக்கூடியதாயுள்ளது. ஆவியானவரின் செயற்பாட்டை திருச்சபையென்ற அமைப்பு ரீதியில் மட்டுமல்ல அதன் தனிப்பட்ட அங்கத்தவர் ஒவ்வொருவரிலும் இனம் காணக்கூடியதாயுள்ளது. ஒரு நிர்வாக அமைப்பாகப் பாப்பரசர், ஆயர்கள், குருக்கள், சங்கங்கள், திருச்சபையின் ஆசிரியம், திருவழிபாடு போன்றவற்றிலும் தனிப்பட்ட அங்கத்தவர் ஒவ்வொருவரிலும் அவர்கள் செபத்திலும் புனித வாழ்விலும் ஆவியானவருடைய முத்திரையைக் காணலாம். திருச்சபை முழுவதையுமே ஒற்றுமைப்படுத்திப் புனிதப்படுத்துபவராகவும் நற்செய்தியை புதிய இடங்களுக்கு அறிவிப்பவராகவும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களில் அதை வேரூன்றச் செய்கின்றவராகவும் ஆவியானவர் விளங்குகிறார். சுருங்கக்கூறின் ஆவியானவர் தான் திருச்சபையை இருக்கச் செய்பவரும் இயங்கச் செய்பவரும் ஆவார்.

அருட்திரு S.V.B. மங்களராஜா

## அடிக் குறிப்புகள்

(1) COMBY, Jean, How to Read Church History, vol.i, scm press Ltd, London, 1992, P. 49.

(2) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், பதிப்பாசிரியர் பால் லியோன். வ, ஏரோணிமுசு. த., தூய சின்னப்பர் இறையியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 1987, திருச்சபை, இல. 7, பக். 115.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) Walsh, Michael, J, (Ed), **Commentary on the Catechism of the Catholic church**, Article "The Holy spirit" by O Donnell John, Geoffrey Chapman, 1994, P. 175.

(4) Latourelle, Rene & Fisichella, Rino, (Eds), **Dictionary of fundamental Theology** (English edition), Crossroad, New York 1994. Article 'Holy Spirit' by Francesco Lambiasi p. 459.

(5) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் இல. 11, p. uu. 508–510

(6) Kommonchak, Joseph, A., Collins Mary, Lane, Deomot A., **The New Dictionary of Theology**, Theological publications in India, Bangalore, 1994, Article Holy spirit by Imbelli Robert, p. 483.

(7) Latourelle, Rere & Fisichella, Rino, (Eds) op. cit, Article 'Magisterium' by Francis A. Syllivan, p. 615.

(8) Article **Infallibility** by John T. Ford, p. 517 **The New Dictionary of Theology**

(9) Catechism of the catholic church op. cit no 1116 p. 221

(10) Cf the Holy Spirit op. cit... p. 90

(11) Catechism of the catholie church op. cit. no 2623, p. 474

(12) Ibid no 2672. p. 483.

(13) கிறிஸ்துவில் வாழ்வு அவரில் வளர்வோம் நூல் வரிசை 4, தமிழக விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம் திண்டிவனம் (இந்தியா) 1994, பப 72–73.

(14) இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் op. cit மறை அறிவிப்புப் பணி இல. 4 பப 641-643

(15) The Holy Spirt op cit. p. 130.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rev. Fr. S.V.B. Mangalarajah

**Synopsis**

## Holy Spirit in the church

The early councils of the church formulated a profession of faith on the Holy Spirit and brought out clearly its equal nature in the divine Trinity.

The day of the Pentecost was the birthday of the church The Holy Spirit is the temple of the mystical body of Jesus Christ.

The church has been always guided by the Holy Spirit in the fulfillment of her mission of salvation. The magisterium of the church is being inspired by the Holy Spirit in order to give the right direction to the life of faith of the people of God.

The sacraments of the church become effective by the power of the Holy Sprit. It is through the inspiration of the Spirit that one is able to pray to the Father.

The life of the christian is full of the Holy Spirit and it is manifested by the fruits of the Spirit. The fruits of the Spirit make the life of the christian meaningful and relevant.

---

" உண்மை யாரிடமிருந்து வந்தாலும்
எதைப் பற்றியதாக இருந்தாலும்
அஃது இறைவனின் ஆவியானவரிடமிருந்தே
வருகின்றது "

புனித அக்குவின்
தோமையார்.

---

" நம்மில் என்னென்ன நன்மை
இருக்கிறதோ அவை அனைத்
திற்கும் காரணமானவர்
தூய ஆவியே"

திருத்தந்தை 13 ஆம் சிங்கராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவழிபாட்டில் தூய ஆவியானவர்

## முன்னுரை:

திருவழிபாட்டின் சாரம்சம் இறைமக்களை அர்ச்சித்துப் புனிதப் படுத்துவதும், இறைவனை மகிமைப்படுத்துவதுமேயாகும். புனிதப் படுத்துதல் என்பது அடிப்படையிலே "புதுப்படைப்பாக்குதல்" என் பதையே குறித்து நிற்கிறது. ஒருபுறத்தில் திருவழிபாட்டின் உட் பொருள் புனிதப்படுத்துதலைச் சுட்டி நிற்கின்றபோது மறுபுறத்தில் இப் புனிதப்படுத்தலின் ஊற்றானவராக தூய ஆவியானவர் செய லாற்றுகின்றார். திருவழிபாட்டின் அடித்தளம் திருச்சபையாக இருக் கிறபோது திருவழிபாட்டின் கொண்டாட்டங்களை நிகழ்த்தும் பொறுப்பு கிறிஸ்துவால் திருச்சபைக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இறைவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட அரச குருத்துவத் திருக்கூட்ட மாகிய திருச்சபை இயல்பிலேயே இப் புனிதத்துவ நிலையில் இருப்பது மட்டுமன்றி தொடர்ந்தும் தன்னைப் புனிதப்படுத்தி இவ்வுலகையும் புதுப்படைப்பாக்கி அர்ச்சிக்க அழைக்கப்பட்டிருக்கிறது. இறைவன் தூயவராக இருப்பதுவே இம்மக்களும் தூயவராக, புனிதப்படுத்தப் பட்டவர்களாக இருப்பதற்கு காரணமும், அடித்தளமுமாக அமைகிறது. (1 இரா. 2 : 9 , 15 - 16, லேவி 19 : 2)

மறுபுறத்தில் நாம் பார்க்கின்றபோது, புனிதப்படுத்தலுக்கான இவ் அழைப்பு வெறும் அழைப்பாக மட்டுமன்றி, இறைத் தந்தையின் புனிதத்தில் நாம் கிறிஸ்துவில் பங்குபெறுவதற்கு தூய ஆவியின் நிறை வான கொடையாகவும் இது அமைகிறது. இறைத்தந்தையில் அவர் மகன் யேசுக்கிறீஸ்துவிற்குரிய இப் புனித நிலை இயற்கையாகவே தூய ஆவியின் மூலம் நமக்கு பொழியப்படுகிறது. ( திருப்பணி. 2: 4, கலா. 4 : 6, உரோ. 8 : 14 )

இப் புனிதப்படுத்தப்பட்ட நிலை, நாம் தூய ஆவியிலே அர்ச்சிக் கப்பட்டு யேசுக்கிறீஸ்துவில் நாம் இறைத்தந்தையை "அப்பா" என்று அழைக்கும் போது அவர் பிள்ளைகள் என்ற உரிமைப் பேற்றில் எமக்கு அருளாகக் கிடைக்கின்றது. எனவே திருவழிபாட்டின் புனிதப்படுத்தல் என்பது தூய ஆவியின் அருட்பொழிவிலே தங்கியிருப்பதால் தூய ஆவியானவரை நாம் திருவழிபாட்டில் இருந்து வேறுபடுத்தி நோக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது. அத்துடன் திருவழிபாட்டின் அர்ச்சிக்கும் அனுபவம் தூய ஆவியின் அருட்பொழிவின்றி எமக்குகிட்டவும் முடியாது. அவ்வாறே நாம் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களையும் தூய ஆவியானவரின் அர்ச்சிக்கும் அருட்கொடையில் இருந்து வேறுபடுத்தி ஒப்புநோக்கவும் முடியாது.

## இயேசுவின் பாஸ்கா மறைபொருளும் ஆவியானவரும்.

திருவழிபாடு என்பது யேசுக்கிறிஸ்துவின் பாடுகள். மரணம் உயிர்ப்பைக் கொண்டாடுவது என்று கூறுகின்றபோது அங்கும் தூய ஆவியானவரின் செயற்பாட்டை நாம் ஆழமாக ஆய்ந்து அறியக் கூடியதாக இருக்கிறது. புனித லூக்காவின் நற்செய்தியில் யேசுவின் வாழ்வு தூய ஆவியின் இயக்கத்திலே வாழப்பட்ட வாழ்வு என்பது தெளிவுறச் சித்தரிக்கப்படுகிறது. திருவழிபாட்டின் மையமாகிய யேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு நிகழ்வுகளை யேசுவின் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட வாழ்வில் இருந்து நாம் பிரித்துப்பார்க்க முடியாது. யேசுவின் வாழ்வு அதாவது மனுக்குலத்தைப் புனிதப்படுத்தி அவர்களை அர்ச்சிக்கும் பணிவாழ்வே அவரது பாடுகள் மரணத்திற்கு அடித்தளமிட்டது. இப் பணிவாழ்வு தூய ஆவியில் இணைந்த வாழ்வாகவே இருந்தது என்பது புனித லூக்காவின் இறையியலாக இருக்கிறது. புனித அருளப்பர் தனது நற்செய்தியில் யேசுவின் வாழ்வு, அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பன விசுவசிப்பவர்களை தூய ஆவியிலும் உண்மையிலும் அர்ச்சிக்கின்ற பணியையே நோக்காமாகக் கொண்டமைந்தன என்பதைத் தெளிவுபடுத்துகின்றார். அந் நற்செய்தியில் குறிப்பிடப்படும் ''உயிருள்ள நீர்'' கிறீஸ்துவிலே அருட்பொழிவாகப் பெறப்படும் ஆவியையும், விசுவசிப்பவர்களைப் புனிதப் படுத்தும் ஆவியையுமே குறிப்பதாக வேதாகம ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். அருளப்பர் தமது நற்செய்தியில் ''யேசு தலை சாய்த்து ஆவியை ஒப்படைத்தார்'' (19 : 30) என்று கூறுவது நற்செய்தியின் பல பகுதிகளிலும் அருளப்பர் குறிப்பிடும் '' உயிருள்ள நீர் '' இறைமக்களைப் புனிதப்படுத்தும் தூய ஆவியே என்பதைத் தெளிவாக்குகின்றது.

இயேசுவின் புனிதப்படுத்தும் ஆற்றல் தூய ஆவியில் ஊற்றாகப் பொங்கியெழும் என்பதும் (அரு. 1 : 37 - 39) அந்த ஆவியைக் குறிப்பதே யேசுவின் '' உயிருள்ள நீர் '' (4:10-14, 7:38) என்பதும் அருளப்பரின் இறையியல் வாதமாக அமைகின்றது. இவற்

றிற் செல்லாம் மகுடமாக இந்த உலகைப் புனிதப்படுத்தும் "நீர்" யேசுவின் விலாவில் இருந்தே பாய்ந்தோடியது என்று குறிப்பிடுகின்றார். (19 : 34) உலகினரைப் புனிதப்படுத்தும் யேசுவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு நிகழ்வுகளின் மையமாக மட்டுமன்றி இந் நிகழ்வுகளை உலகிற்கு அறிவித்து, இந் நிகழ்வுகளில் இறைமக்களைப் பங்கேற்க அழைக்கும் ஒவ்வொரு சீடனிலும் இத் தூய ஆவியானவரே செயற்படுகின்றார் என்பதையும் அருளப்பர் தனது நற்செய்தியில் குறிப்பிடுகின்றார். (14:16-17, 15:26-27, 16:8-11, 20:21-23)

## திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தில் ஆவியானவர்

இன்று திருவழிபாடு என்பது கிறீஸ்துவின் உயிருள்ள பிரசன்னத்தையும் அவரது மீட்பின் மறைபொருளாகிய பாடுகள் மரணம், உயிர்ப்பு நிகழ்வுகளையும், அவற்றை அடையாளங்கள் மூலம் பிரசன்னப்படுத்துவதையும் அதன் மூலம் கிறீஸ்துவின் புனிதப்படுத்தும் மீட்பின் இறையருள் நிறைவாகப் பொழியப்படுவதையுமே எமக்குச் சுட்டி நிக்கின்றது. திருவழிபாட்டில் மீட்பின் முழுமையான மறைபொருள் கண்களிற்குப் புலப்படாத மீட்பின் அருளாக கண்களிற்குப் புலப்படும் திரு அடையாளங்கள் மூலம் பிரசன்னப்படுத்தப்படும் போது திருவழிபாடு பரமதிருத்துவத்தின் முழுமையான மீட்பின் செயல்களை அனுபவிக்கும் ஓர் நிகழ்வாக மாறிவிடுகிறது. தந்தை மீட்புச் செயலின் ஊற்றாகவும், முடிவிடமாகவும், கிறீஸ்து அதன் மையமாகவும், சாரம்சமாகவும் ஆவியானவர் கிறிஸ்துவை இந்நிகழ்விலே பிரசன்னப் படுத்துகிறவராகவும், செயலாற்ற, இத் திருவழிபாட்டின் மறைபொருள் கொண்டாடப்படுகிறது. தூய ஆவியானவர் எவ்வாறு மீட்பு வரலாற்றின் ஆரம்பம் தொட்டு செயற்பட்டாரோ அவ்வாறே இன்றும் திருவழியாட்டின் ஊடாக திருச்சபையில் செயலாற்றுகிறார்,

தூய ஆவியானவர் திருவழிபாட்டில் பிரசன்னப்படுத்தும் கிறீஸ்துவின் பாஸ்கா நிகழ்வுகள் வெறும் கடந்தகால நிகழ்வுகள் அல்ல. மாறாக கடந்தகால நிகழ்வுகளை அதே உண்மை நிகழ்வுகளாகப் பிரசன்னப்படுத்தி அந் நிகழ்வுகளில் எமது எதிர்கால எதிர் நோக்கை நாம் முன்சுவைக்கும் நிகழ்வுகளாகவும் ஆவியானவர் மாற்றி விடுகின்றார். அந்த வகையிலேயே திருவழிபாட்டின்போது குருவானவர் மீட்பின் நிகழ்வுகளைப் பிரசன்னப்படுத்தும் தூய ஆவியைக் கூவியழைத்து செபிக்கின்றபோது தந்தை தூய ஆவியை திருச்சபைமீது நிறைவாகப் பொழிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு வழிபாட்டிலே ஆவியானவர் செயற்படுகின்றார் என்பது சிதறிப்போன யூதர்களைப் பெந்தக்கோஸ்தே தினத்தன்று தூய ஆவியானவர் இறைவனின் நகரிலே ஒன்றாகக் கூட்டிச் சேர்த்த நிகழ்வைப் புதிய பெந்தக்கோஸ்தே அனுபவமாக தருகின்றது. கிறிஸ்துவில் விசுவாசம் உள்ளவர்களை திருவழிபாட்டில் கூட்டிச் சேர்த்துப் புனிதப்படுத்தப்பட்ட குழுமத்தை கிறிஸ்துவின் உடலாகக் கட்டி எழுப்புவதும், தந்தையை மகிமைப்படுத்துவதும், திருவழிபாட்டில் தூய ஆவியின் ஆற்றலையும், வல்லமையையும், வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுகிறது. அதுமட்டுமன்றி அன்பு விருந்திலே தூய ஆவியால் கூட்டப்பட்ட ஆதித் திருவழிபாட்டுக் குழுமத்தின் பகிர்ந்து வாழும் ஒன்றிப்பின் தன்மையையும் இன்று எமது திருவழிபாட்டுக் குழுமங்களிலே தூய ஆவியானவர் நிறைவேற்றி வருகின்றார். மறுபுறத்தில், இறைவார்த்தையை பிரசன்னப்படுத்துவதிலும் அதை செவிமடுக்கும் திறந்த மனதை அளிப்பதிலும், தூய ஆவியானவர் வல்லமையோடு செயல்படுகின்றார்.

## திருவழிபாடும் வாழ்வும்

இவற்றை விட திருவழிபாடு என்பது மீட்பின் மறைபொருள் கொண்டாட்டத்துடன் நிறைவுபெறும் ஒரு நிகழ்வாகமட்டுமன்றி, இம் மறைபொருள் கொண்டாட்டம் நாளாந்த கிறீஸ்தவ வாழ்வில், வாழ்வின் அனுபவமாக மாறவேண்டும். நாம் நாளாந்தம் கொண்டாடும் திருப்பலிக் கொண்டாட்டமாயினும் சரி, ஏனைய திருவருட்சாதனக் கொண்டாட்டங்களாயினும் சரி, எமது நாளாந்த வாழ்வின் அனுபவமாக மாறுவதே திருவழிபாட்டின் முழுமையான பங்கேற்றல் ஆகும். இதற்கு எம்மை அழைத்து 'செல்பவரும், அதைநிறைவுறச் செய்பவரும், தூய ஆவியானவரே என்பதை நாம் எமது கிறீஸ்தவ வாழ்விலே அனுபவிக்கக்கூடியதாக இருக்கிறது.

கிறீஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பின் மறைபொருளின் ஊற்று, யேசுவின் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட வாழ்வாக இருந்தது. ஒடுக்கப்பட்டோருக்கு விடுதலை அளிப்பதும், பாவிகளை அன்பு செய்வதும் அநீதியான சமூக, அரசியல் சமய நெறிமுறைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதும் தூய ஆவியின் ஆற்றலால் விளைந்த செயல்களாகவே யேசுவின் வாழ்வில் காணப்பட்டன. அத்தகைய வாழ்வின் சிகரமாகவே யேசுவின் பாஸ்கா மறைபொருள் நிகழ்வுகள் யேசுவின் மீட்பு செயலாக நிறைவு பெற்றன. இன்று கிறீஸ்துவின் பஸ்கா மறைபொருளை திருவழிபாட்டில் கொண்டாடும் நாமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாழ்வில் அவரது பாடுகள் மரணம், உயிர்ப்பை அனுபவிக்க அழைக்கப்படுகின்றோம். புனித பவுல் கூறுவதுபோல கிறிஸ்துவின் மரணப்பாடுகளை நாம் எம் வாழ்வில் தாங்கிச் செல்கின்றோம். கிறீஸ்துவோடு நாம் நாளாந்தம் இறக்கும் போது கிறீஸ்துவில் எமது சகோதரருக்கு உயிர்ப்பைக் கொடுக்கின்றோம்,

இப்படிப்பட்ட கிறீஸ்தவ வாழ்வு, புனித பவுல் கூறும் நற்கருணைப் பந்தியில், கிறீஸ்து மீண்டும் வருகை தரும் வரை அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பை நாம் அறிக்கையிடச் செய்கிறது. திருவழிபாட்டுக்கு ஊற்றான தூய ஆவியானவரே திருவழிபாட்டை எம் கிறிஸ்தவ வாழ்வாக்கும் எம் சாட்சிய வாழ்விற்கும் ஊற்றாக அமைகின்றார் என்பது தெளிவாகின்றது.

இத்தகைய திருவழிபாட்டுடன் இணைந்த கிறீஸ்தவ வாழ்விலே தான் முழுமையாக எம்மைப் புனிதப்படுத்தவும், இறைவனுக்கு உண்மையான மகிமையைப் பறைசாற்றவும் தூய ஆவியானவர் தமது ஆற்றலை மேன்மேலும் எம்மில் வெளிப்படுத்துவார்.

## முடிவுரை :

இன்று ஆவியானவரில் எம்மைப் புதுப்பிப்பதற்கு குழும — அன்பிய வாழ்வு எமக்கு ஊடகமாக அடையாளம் காட்டப்படுகிறது. திருவழிபாட்டில் ஆவியானவர் விளைவிக்கும் அருட்பொழிவில் வாழப்படும் உண்மையான கிறீஸ்தவ வாழ்வு நிச்சயமாக எம்மை குழும வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் அன்பியப் பகிர்தல் வாழ்விலேயே வெளிப்படுத்தப்படுகின்றது. திருவழிபாட்டின் வார்த்தைப் பகிர்வும் நற்கருணைப் பந்தியில் கிறீஸ்துவின் திருவுடல் திரு இரத்தம் பகிர்வும் ஆவியின் உண்மை அனுபவமாக மாறுமாயின், அப்பகிர்வின் வெளிப்பாடுகள் எம் தனிப்பட்ட, குடும்ப, சமூக பகிர்தல் வாழ்வில் உருப்பெறும் "கிறிஸ்து" அனுபவமாக மாறிவிடும். இத்தகைய பகிர்தல் வாழ்வே ஆவியானவர் எம்மேல் பொழியும் அன்பின் அடித்தளத்தில் கட்டப்பட்ட சிறு கிறீஸ்தவ அன்பியக் குழமங்களை ஏற்படுத்தும். அங்கே உடலிச்சைகளுக்கு ஏற்ற வாழ்வு, இருக்காது. மாறாக ஆவியானவர் விளைவிக்கும் கனிகளான அன்பு மகிழ்ச்சி, அமைதி, பொறுமை........ (கலா. 5:19—24) என்பன வேர்விட்டுப் பெரும் விருட்சமாக வளரும்,

எனவே "திருவழிபாட்டில் ஆவியானவர்" என்ற பொருள் பற்றி சிந்திக்கும் போது திருவழிபாட்டில் தமது இயக்கத்தை நிலை நிறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் தூய ஆவியானவர் எமது தனிப்பட்ட, குடும்ப, குழும வாழ்விலும் அதே இயக்கத்தை ஏற்படுத்தி எமது வாழ்வை யேசுவின் நிலையான திருவழிபாட்டுக் கொண்டாட்டத்துடன் பின்னிப்பிணைத்து எம்மை இறைத் தந்தையிடம் வழிநடாத்தி செல்கின்றார் என்பதையும் நாம் உறுதிசெய்யவேண்டும்.

அருட் சகோ. றொபின்சன்
(4ம் ஆண்டு இறை இயல்)

உசாத்துணை நூல்கள்


*தியாகு, விவிலியக் களஞ்சியம், பகுதி 1, விவிலிய அறிமுகம், தியான ஆசிரமம், சென்னை, 1991.*

KOMO NC HAK, Joseph A. ed. The New Dictionary of Theology Theological Publications in India, Bangalore 1994.

DAVIES, J. G., ed., A Dictionary of Liturgy and Worship, SCM Press Ltd., London, 1972.

The Holy Spirit – Great Jubilee of the year 2000 the official Text of the Jubilee Series 11.


Bro. A. Robinson Joseph

*Synposis*

## HOLY SPIRIT IN THE LITURGY

Liturgy is a community celebration of the Paschal Mystery of Jesus Christ. In the liturgy we experience the active presence of the Holy Trinity. The purpose of the liturgy is the glorification of God and sanctification of man. Sanctification is possible through the action of the Holy Spirit. The gospel of John brings out clearly that Jesus is the life giving water who becomes the source of sanctification through the outpouring of the Holy Spirit.

According to Luke, Holy Spirit is the source of Christ's whole ministry and it is the same Spirit who is moving the people of God towards sanctification. The Holy Spirit makes present the paschal mystery of Christ in the liturgy and inspires the people of God towards active participation in the liturgical celebrations. It is through the Holy Spirit that one is able to bear witness to Christ, fulfil God's redemptive act and to renew the whole creation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்தவ வாழ்வும் தூய ஆவியும்

## இறை வாழ்வை விசுவாசத்துடன் பெற்றுக்கொள்ளத் தூண்டும் ஆவியானவர்.

மனித உள்ளத்தில் கிறிஸ்து உறையும் பொருட்டு தந்தை ஆவியானவர் வழியாக செயல்படுகின்றார். விசுவாசம், இறைவனின் அன்புக்கொடை. இதன் வழியாக தூய ஆவியும் கிறிஸ்துவின் வாழ்வும் மனிதன் மேல் பொழியப்படுகின்றன. பொதுவாக புதிய ஏற்பாட்டிலும், சிறப்பாக புனித சின்னப்பரின் மடல்களிலும் காணப்படுவதுபோன்று ''ஆவியின் வல்லமையால்'' (உரோ. 15;16) அவர் வழிநடத்தப்பட்டார். விசுவாசமின்றி ஒருவன் தன்னை நற்செய்திக்கு அர்ப்பணிக்க முடியாது. ஆவியானவரின் அருளாலும், ஆற்றலாலுமே ஒருவன் விசுவாசம் உள்ளவனாகின்றான். ஏனெனில் உயிருள்ள விசுவாசம் முழுமனிதனையும் ஆட்கொண்டு அவனது முழுவாழ்வையும் "விசுவாச வாழ்வாக" மாற்றுகின்றது. ஆவியானவர் விசுவாசத்துக்கு ஊட்டமளித்து அதை ஆழமாக்கி, இறைவார்த்தையை அறிக்கையிடுவதற்கு உயிரூட்டமும் செயலாற்றலும் அளிக்கின்றார். (1தெச, 1: 5; 4: 8; 1இராயப்பர். 1: 12) இறைவார்த்தையைக் கேட்பதற்கு உதவுகின்றார். (2கொரி. 3: 14-15) இயேசுவை விசுவாசத்துடன் ஏற்றுக்கொள்வதற்கு அவருக்காக சான்று பகர்கின்றார் (அரு, 15:26; அப். பணி, 1: 8; திருவெளிப்பாடு 19: 10).

இவ்வாறு ஆவியானவர் விசுவாசத்தை உயிரோட்டமுள்ளதாகச் செய்வதன் விளைவு ஒருவன் தன்னை இயேசுக்கிறிஸ்துவுக்கு முழுமையாக அர்ப்பணித்து அவரைத் தன் வாழ்வின் ஆண்டவரும் குருவுமாக ஏற்றுக்கொள்ளச் செய்வதே. ஆவியானவரில் பங்குகொள்ளாமல் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் கொள்ளமுடியாது. ஆவியானவரே இயேசு யார் என்பதை மனிதருக்கு வெளிப்படுத்துகின்றார்.

'ஆவியானவராலன்றி இயேசு ஆண்டவர் என்று எவரும் சொல்ல முடியாது. (1கொரி. 12: 3). விசுவாசத்துக்கு மனித ஒத்துழைப்பு தேவையென்றாலுங்கூட விசுவாசம் முதலில் இறைவனின் கொடை; ஏனைய கொடைகளைப் போன்று அது ஆவியானவரால் அருளப்படுகின்றது. இவ் விசுவாசம் வாழ்வில் வெளிப்பட ஆவியின் உள்ளார்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி அவசியம். இந்த ஆவியே மனிதனின் உள்ளத்தைத் தூண்டி யெழுப்பி இறைவன் பக்கம் திருப்புகின்றார், அகக்கண்களைத் திறந்து அனைத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு எளிதாக்கி உண்மையை விசுவசிக்கச் செய்கின்றார். (இ. வெ. 5) இவ்வாறு விசுவாசத்தினால் தூண்டப்பட்டு உலகம், அதன் மெய்மை என்பவை மட்டில் தனக்குள்ள மனப்பதிவை கிறிஸ்தவன் மாற்றிக் கொள்கிறான். அனைத்தையும் ஆவியின் கண்கொண்டே பார்த்து அவற்றை விளக்குகின்றான். வரலாற்றில் மீட்புத் திட்டத்திற்கு எதிரானவற்றை இனங்கண்டு கொள்ளவும் இறைவனின் மறைபொருட்கள் மட்டில் இதயத்தைத் திறந்து விடவும், இன்னும் வரலாறு முழுவதையும் அவரது கண்ணோட்டத்துடன் பார்க்கவும் ஆவியானவரே துணைசெய்கின்றார். "நாம் பெற்றுக்கொண்டது இந்த உலகத்தின் மனப்பான்மையன்று, கடவுளிடமிருந்து வரும் ஆவியே. கடவுள் நமக்கு அருளியவற்றை அந்த ஆவியினால் உணர முடியும். அவற்றை நாங்கள் மனித ஞானம் கற்பிக்கும் சொற்களால் பேசாமல், ஆவியானவர் கற்பிக்கும் சொற்களால் பேசுகிறோம். இங்ஙனம், தேவ ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு ஆவிக்குரியவற்றை விளக்கியுரைக்கின்றோம்". (1கொரி. 2: 12-13) விசுவாசத்தின் அடித்தளம் மனித ஞானத்தில் ஊன்றியிராமல் ஆவியின் வெளிப்பாடுகளிலும் அவரது வல்லமையிலுமே தங்கியுள்ளன என்று ஆவியின் செயற்பாட்டினால் ஒருவன் உணர்ந்து கொள்கின்றான். அதாவது நற்செய்தியின் சாரம்சத்தை உணர்ந்து இறைவனின் மதிப்பீடுகள் மனித மதிப்பீடுகளுக்கு முரணானவை என்று அவன் ஏற்றுக் கொள்கிறான்.

## பிள்ளைகளாக்கும் தூய ஆவி

புனித சின்னப்பர் கூறுவதுபோன்று மனிதர்களை இறைவனின் பிள்ளைகளாக்கி, சுவிகாரத்தின் கொடையைக் கொடுப்பது மட்டுமல்ல, இறைவனை அன்புடன், அப்பா தந்தாய் என்றழைத்து அனுபவிக்க ஆவியானவர் அருளுகின்றார். ஒருவன் தந்தையை நோக்கி அப்பா என்று செபத்தில் அழைக்க எத்தனிப்பது அவனது சொந்த இயல்பினால் அல்ல. மாறாக ஆவியானவரே அக்கறையுள்ள அளவுகடந்த அன்புடன் "அப்பா தந்தையே" என்று அழைக்க உதவுகின்றார். (உரோ. 8: 15). நாம் இறைவனின் பிள்ளைகள் என்னும் நிலையை ஆவியானவர் ஆழமாக உணரச் செய்கின்றார். இவ்வுணர்வு முழு மனிதனில் ஒரு வளர்ச்சியையும், மாற்றத்தையும் ஏற்படுத்தி அவன் "ஓர் புதுப்படைப்பு" (கலா. 6: 15; 2கொரி. 5: 7) என்பதை அவனுக்குத் தெளிவாக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செபிக்கப் பயிற்றும் தூய ஆவி

ஆவியானவரே கிறிஸ்தவ செபத்தின் உள்ளார்ந்த ஆசிரியர். அவரே உயிருள்ள செபப் பாரம்பரியத்தின் சிற்பி. உள்ளம் இறைவனோடு ஒன்றிப்பதே செபம். செப வாழ்வென்பது என்றும் தூயவரான இறைவன் திருமுன் இருக்கும் பழக்கமே என்று ஜோன் டமசீன் என்பவர் கூறுகின்றார். உள்ளத்தை இறைவனிடம் உயர்த்துவதே செபம். எனவே, மனிதன் வார்த்தைகளை உச்சரித்தாலும் உண்மையில் செபிக்க முடியாது. இறைவனோடு ஒன்றிப்பதற்கான முயற்சி என்னும் அடிப்படையில் செபம் என்றுமே இறைவனின் கொடையே. மற்றெந்தக் கொடையையும் போன்று செபமும் ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதன் மூலமாகவே நடைபெறுகின்றது. இந்த ஆவியானவரே நம்மைத் தந்தையுடன் உறவு கொள்ளச் செய்கின்றார். மாற்றங்கள், அவநம்பிக்கை நிறைந்த நிலைகளுள் வாழும் மனிதனுக்குச் செபிப்பது கடினமாகின்றது. எதைக் கேட்பதென்றே தெரியாமல் போகலாம். இந்நிலை அவனில் மனச்சோர்வை ஏற்படுத்தக்கூடாது. சுவீகார மகன் என்னும் நிலையை அனுபவிக்கச் செய்த அதே ஆவிதான் இப்பொழுது அந்த மனிதனில் அவன் மூலமாகச் செபிக்கின்றார்.

மகன் என்னும் நிலையின்றி எச்செபமும் கிறிஸ்தவ செபமாகாது. இதனால்தான் ஆவியின் சுவீகார மக்கள் என்னும் கொடையைப் பெற்றுக் கொண்டவர்கள் கடவுளை ''அப்பா, தந்தையே'' (உரோ. 8:15) என்று அழைக்கும் உரிமையைப் பெறுகின்றார்கள். தந்தையாகிய இறைவனுடன் பிள்ளை என்னும் உறவில் வாழ அழைக்கப்படுவதால் செபத்தில்தான் ஒருவன் தன் சுய அடையாளத்தை உணருகின்றான்.

## ஆவியில் மனமாற்றம்

கிறிஸ்தவனின் வாழ்வு, ''ஆவியில் நடத்தல்'' என்னும் நிலையில் எப்போதும் இருப்பதில்லை. அதற்கு மாறாக பல முறைகளில் கிறிஸ்தவன் தோல்விகளையும், சோதனைகளையும் அனுபவிக்கின்றான். குறிப்பாக இவ்வேளைகளில்தான், ஆவியானவர் கிறிஸ்தவனைக் கைவிடாது அவனை மீண்டும் கைதூக்கி விடுகின்றார். இவ்வாறு அவனை மனமாற்றத்திற்குத் தூண்டி பாவங்களுக்கு மன்னிப்பைக் கொடுத்துத் தொடர்ந்து பயணிக்கச் செய்கின்றார். இது திருவிவிலியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும், திருச்சபை மரபினாலும் உறுதிப்படுத்தப்பட்ட ஆறுதல் தரும் உண்மை

தன் சுதந்திரத்தைத் துர்ப்பிரயோகம் செய்யும் போது தான் ஓர் படைப்பு என்பதை மறந்து மனிதன் இறைவனுக்குப் பதில் தன்னையே மையமாக்கிக் கொள்கிறான். இவ்வாறு பாவத்தால் மனிதன் தன்னை இறைவனிடமிருந்து அந்நியப்படுத்தும்போது கிறிஸ்துவின் மன்னிப்பு அவனுக்கு வழங்கப்படுகின்றது. ஒருவன் மனமாற்றமடைந்து திருச்சபையாகிய தூய உடலில் மீண்டும் ஒன்றிணையும் ஆற்றல் பெறுகின்றான்.

தூய ஆவியின் வருகையின்போது நடைபெற்றது போன்று, தந்தையின் இல்லத்துள் மீண்டும் வருதல் அல்லது ஒருவனின் போக்கில் ஏற்படும் மாற்றம் ஆவியால் தான் ஏற்படுகின்றது.

'ஆவியின் வருகையின் பின்னர் புனித இராயப்பரின் மறையுரையைக் கேட்டவர்கள் உள்ளம் ''குத்துண்டவர்களாய்'' மனமாற்றம் பெற்றனர். ( அப். பணி. 2: 37 - 38 )........

இங்கு, முதலில் ஆவியானவர் உள்ளங்களைத் தொட்டு இறைவன் பால் திருப்புபவராகவும் இதன் விளைவாக ''உள்ளத்தின் அன்பு விருந்தினராகவும்'' உணரப்படுகின்றார்.

உரோமருக்கு எழுதிய திருமுகம் ''பாவத்தின் சட்டத்திலிருந்தும், மரணத்திலிருந்தும்'' ( 8:2 ) ஒருவன் மனமாற்றம் பெற்றுக் கிறிஸ்துவுக்கு உரியவனாகவும் ஆக்குபவராக ஆவியானவரைக் காட்டுகின்றது, இயேசுவும் ஆவியானவரையும் பாவமன்னிப்பையும் தொடர்புபடுத்திக் காட்டுகின்றார்''. பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ..... ...(அரு, 20:22-23)

எனவே ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனை மனமாற்றத்திற்குத் தூண்டுபவர் மட்டுமல்ல உண்மை மனமாற்றமிருக்கும்போது குறிப்பாகப் பாவ அறிக்கை என்னும் அருட்சாதனத்தின்போது பாவ மன்னிப்பை வழங்கி இறைவாழ்வைப் புதுப்பிக்கிறார். ஒப்புரவு என்னும் அருட்சாதனம் ஆவியின் விளைவால் உண்டாகும் மனமாற்றமே. இதைக் குருவும் பாவ அறிக்கையிடுபவரும் ஆவியினால் நிரப்பப்படும்போது உணருகின்றார்கள். ஆவியானவரே ''புதிய உள்ளத்தை'' உருவாக்கிக் கொடுக்கிறார். அதாவது இறைவன் மட்டில் அன்பு நிலையை உருவாக்கி அவரது திருவுளத்தை ஏற்றுக்கொள்ளச் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவியின் செயலாலேயே பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்னும் உண்மை புனித அம்புறோஸ், புனித ஜெருசலேம் சிறில் போன்ற மேலைத்தேச, கிழைத்தேச தந்தையர்களின் கூற்றுக்களில் காணக்கிடக்கின்றன.

## புதுப்பிக்கும் தூய ஆவி

அருட்கொடைகளை வழங்குபவர் ஆவியானவரே. மனித வரலாற்றில் காலத்திற்கேற்ற கொடைகளை வழங்கி, கிறிஸ்தவ வாழ்வின் புதிய வெளிப்பாடுகளுக்கு வித்திடுபவரும் அவரே. தற்காலத்தில் செயல்படும் பல்வேறு ஆன்மீக இயக்கங்களும் குழுக்களும் ஆவியானவரின் செயற்பாடுகள் என்றே கூற வேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப புதிய வாழ்க்கை முறைகளையும், அமைப்புக்களையும் திருச்சபையிலும் உலகிலும் புகுத்தி வரலாற்றை ஆவியானவர் வழிநடத்துகின்றார் என்பது வத்திக்கான் சங்கத்தின் கூற்று (திருச்சபை. 3, 4, 11, 12, 30) ''திருச்சபை என்னும் தோட்டத்தில் பூக்கும் புதுமலர்கள்'' என இவற்றைத் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் கூறுகின்றார். திருச்சபைக்கு இவை நம்பிக்கையூட்டுகின்றன என்பது அவரது திடமான எண்ணம். இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து செயற்படத் தூய ஆவியானவர் தூண்டுகின்றார், துணைநிற்கின்றார்.

## ஆவியில் உறவு

கிறிஸ்தவ வாழ்வில் ஆவியானவருக்குரிய இடத்தை நாம் கொடுக்கும்போது,

## (அ). நமது அனுபவங்கள்

எமது இறை அனுபவங்கள் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டதாயுள்ளன. ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட ஒருவர், என்றும் செயற்பாடு நிறைந்தவராக மாறுகின்றார். (காண், கலா. 5:25). தனிநபருக்கு வரங்கள் வழங்கப்பட்டாலும் பொது நன்மைக்காகவே வழங்கப்படுகின்றன. உ-ம்: இறைவாக்கினர்களுக்கு அருளப்பட்ட வரங்கள் (காண். எசே. 36; 26- 27; 37: 5- 14; யோவேல் 3: 1-2). இவ் அனுபவங்கள் உள்ளத்தின் ஆழத்தில் ஏற்படுகின்றன. ''நான் உங்களுக்குப் புதிய இதயத்தை அருள்வேன்''. (எசே. 36;26). ஆவியில் வாழ்வு ஐம்புலன்களைக் கடந்ததாக இருக்கின்றது. இது நமக்கு உள்ளொளியைக் கொடுத்து எம்மைப்பற்றியும், உலக மெய்மைகள், நிகழ்வுகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்த்தங்களையும் உய்த்துணரச் செய்கின்றது. ''அவை அனைத்தையும் சீர்தூக்கிப் பார்த்து நல்லதையே ஏற்றுக்கொள்ளுங்கள். தீமையானது எல்லாம் விட்டு விலகுங்கள்'' (1தெச. 5: 21- 22).

## (ஆ). இறைவனோடு நமக்குள்ள உறவை நோக்குகையில்

அவர் உயிருள்ளவராய் இருக்கின்றார். ''அவர் ஆண்டவராகவும், உயிரளிப்பவராகவும் இருக்கின்றார்''. இதன் பயன்பாடு என்னவெனில் இறைவனோடு நாம் கொள்ளும் தொடர்பு அவரை உயிருள்ள ஒருவராக நம் உள்ளத்தில் வரவேற்பது அவ் உறவு. நம் முழு வாழ்வையும் பாதிப்பதாக அமைகின்றது. இவ்வாறு இவரை வரவேற்கும்போது அவர் நம்மோடு நமக்காக எவ்வாறு வாழ்கின்றார் என்பதைத் திருச்சபை, திருநூல் என்பவற்றின் துணையுடன் உணருகின்றோம். உயிருள்ள இவ் இறைவனை எதிர்கொள்ளும்போது நமது உள்ளத்தில், விடுதலைக்காக ஏங்கும் நம் வாழ்வில் அவரை ஏற்கின்றோம்.

## முடிவுரை

இங்கு கூறப்பட்டவைகளிலிருந்து எவ்வாறு ஆவியானவர் ஒரு கிறிஸ்தவனது வாழ்வின் நடுநாயகமாக விளங்குகின்றார் என்பது தெளிவாகிறது. ஒருவன் ஆவியானவருக்கு அர்ப்பணிக்கப்பட்டவனாயிருப்பது என்பது அவன் வாழ்வதும் இயங்குவதும் அந்த ஆவியிலே தான்.

ஆவியால் வழிநடத்தப்படுதல் என்பது மீட்பை ஒரு முன்னிபந்தனையாக ஏற்றுக்கொள்வது. அதேவேளை இறையன்பால் கொணரப்பட்ட புதுவாழ்வுக்குச் சான்று பகர்வது. இங்கு சான்று பகர்ந்து அன்புடன் வாழ அழைக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசியின் பொறுப்புணர்வையும் பற்றிச் சிந்திக்க முடியும். தன் சகோதரர்களுடனும் முழுப்படைப்புடனும் புதிய உறவை உருவாக்க அழைக்கப்பட்ட விசுவாசி, தன் சுய அடையாளத்தை உணருகின்றான். அனைத்திற்கும் மேலாக இது விடுதலையை நோக்கிய ஓர் கடின பயணம்.

ஆவியில் பெற்றுக் கொள்ளும் இவ் அனுபவம், அன்பு செய்யும் பொருட்டு ஒருவர் தன்னிலே ஏற்படுத்தும் விடுதலையாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தழுவல்

The Holy Spirit – Great Jubilee of the Year 2000 the Official Text of the Jubilee Series – 11

## துணை நின்ற ஏனைய நூல்கள்

1. Encyclical; "On the Holy Spirit in the life of the Church" by John Paul 11
2. "ஆவியில் ஒப்புரவு" தோழன் ஜனவரி 1998.
3. "பிள்ளைகளாக்கும் தூய ஆவி" தோழன் மே, ஜூன் 1998.
4. "ஆவி" விவிலியக் களஞ்சியம் 1, விவிலிய அறிமுகம், தியான ஆச்சிரமம், சென்னை - 28.
5. "பணிசெய்ய அழைப்பு" ஆவியின் தரிசனம், தமிழ்நாடு விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையம், திண்டிவனம் - 604 002.
6. "ஆவியினால் இயக்கப்படும் கிறிஸ்தவன்" தோழன், மே, ஜூன் 1998.
7. உறுதிப்பூசுதல் பற்றிய எனது வகுப்புக் குறிப்புகள்.

அருள்திரு. எம். றெஜீஸ் இராஜநாயகம்.

# CHRISTIAN LIFE AND THE HOLY SPIRIT

A man of God is said to be a "bearer of the Spirit". It is the Spirit who makes us righteous before God through faith in Jesus Christ. This sanctifying action of the Spirit is called partaking in the life of God or divinization. Believing is possible only by grace of the Holy Spirit, because living faith involves the total person and transforms his life into a life of faith.

The Spirit makes us children of God. It is the Spiri who enables us to cry out with tenderness "Abba, Father!" And it is the same Spirit who teaches us to pray. There

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

are as many paths of prayer but it is the same spirit who acts in all. And it is in prayer that one realizes his own identity.

When the christian experiences failure and sin, it is the Spirit who induces him to repent and grants him pardon for sins. Renewed in the Spirit the christian is commissioned to bear witness to the life in the Spirit. When we give special attention to the Holy Spirit in our christian life, the shade of our spiritual experience becomes one that is active, oriented towards the common good, one that is experienced in the depths, one that gives insight and enables us to discern the meaning of events, realities, and ourselves and in fine it becomes an experience of conversion.

*Fr. M. Regin Rajanayagam*

---

ஒன்றுபடுத்தும்
ஆவியானவர்

" ஒரே தூய ஆவியைப் பெற்றுக்
கொண்டுள்ள நாம் அனைவரும்,
இறைதந்தையோடும், அவர் மகன்
இயேசு கிறீஸ்துவோடும்
ஆவியினால் ஒன்றாக்கப்பட்
டிருக்கின்றோம். நாம் பலராயினும்
நம் அனைவருக்குள் குடி கொள்ளும்
ஆவியானவர் ஒருவரே. அவரே
நமது சிந்தனைகளையும், உணர்வு
களையும் ஒன்றாகச் சேர்த்துக்கட்டி
எல்லாம் இணைந்து ஒன்று போலத்
தோன்றச் செய்கிறார். எல்லா
மனிதரிலும் குடிகொள்ளும் ஒரே
ஆவியானவர் எல்லா மனிதரையும்
ஒற்றுமைக்கு அழைத்துச் செல்கிறார் "

அலெக்சாந்திரியா நகரத்து
புனித சிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க நவீன பெந்தக் கோஸ்தே இயக்கத்தின் வளர்ச்சி — ஆவியியல் கண்ணோட்டம்.

## முகவுரை

திருச்சபையின் வரலாற்றில் பல இயக்கங்கள் பற்பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றின. ஆயினும் காலப் போக்கில் பல மறைந்து விட்டன. இன்னும் சில பெயரளவில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றில் பெந்தக்கோஸ்தே இயக்கம் சிறப்பிடம் வகிக்கிறது. ஆவியின் செயற்பாட்டுக்குத் தம்மைமுற்றாகத் திறந்து விட்டு முழுமையான கிறிஸ்தவ வாழ்வு வாழ்வோரின் இயக்கமே பெந்தக்கோஸ்தே இயக்கமாகும்.

பெந்தக்கோஸ்தே நிகழ்வை நோக்கும்போது, முழுத் திருச்சபையுமே ஒரு பரந்த பெந்தக்கோஸ்தே இயக்கமாகும். ஏனெனில் ஆரம்ப காலம் தொட்டு, இன்று வரை திருச்சபை ஆவியின் செயற்பாட்டுக்குத் தன்னை விட்டுக்கொடுக்கிறது. இன்னும் சிறப்பாகக் காலத்தின் தேவைக்கேற்ப ஆவியில் தன்னைப் புதுப்பித்துப் புனிதப்படுத்திக் கொள்கிறது. ஆனாலும் ஆவியின் செயற்பாடு உணரப்படாத சந்தர்ப்பங்களும் திருச்சபையின் வரலாற்றில் காணப்பட்டன. அப்படி இருந்தபோதிலும், ஆவியின் செயற்பாட்டிற்குப் பலர் தம்மை அர்ப்பணித்துச் சிறு, சிறு செபக்குழுக்களாகவும், தனி மனிதர்களாகவும் வாழத் தொடங்கினர். இவர்கள் ஆவியின் கொடைகளை நிறைவாகப் பெற்றுச் சாட்சிய வாழ்வு வாழ்ந்தனர். காலப்போக்கில் இத்தகைய குழும வாழ்வு திருச்சபைக்குள்ளேயே ஓர் கட்டமைப்பைக் கொண்ட ஆவியின் இயக்கங்களாக மாறி ''பெந்தக் கோஸ்தே இயக்கம்'' என்ற பெயரில் இன்றுவரை இயங்கி வருகிறது.

## I வரலாற்றுப் பின்னணி :

### a) ஆதித் திருச்சபையில் பெந்தக்கோஸ்து :

கத்தோலிக்க பெந்தக்கோஸ்தே இயக்கத்தின் வரலாற்றுப் பின்னணியை மிக ஆழமாக உற்று நோக்கும்போது, பெந்தக்கோஸ்து என்னும் நாளில் தூய ஆவியின் வருகையோடு அது அடித்தளம் இடப்பட்டது என்பது மிகத் தெளிவாகக் காட்டப்படுகிறது. (தி.ப. 2:1–13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியைப் பெற்ற எல்லோரும் கடவுளின் வல்லமையைப் பெற்றனர். இயேசுவின் சாட்சிகளாக மாறினர். ( தி. ப. 2 : 14 – 41 ) " தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டாலன்றி வேறு எவரும் ' இயேசு ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது" ( 1 கொரி. 12 : 3 – 6 ) தூய ஆவியானவர் தம் விருப்பப்போல எல்லாருக்கும் தம் கொடைகளைக் கொடுக்கின்றார். ( கொரி. 12:4 – 11 ) இவ்வாறு ஆதித் திருச்சபையில் தூய ஆவியின் செயல் மேலோங்கி நிற்பதையும், ஆவியினால் மக்கள் வழிநடத்தப்பட்டதையும் ( தி. பா. 2 : 42 – 47 ) இப்பகுதி சுட்டிக் காட்டுகிறது.

2) ஆவியா அதிகாரமா ?

ஆனால் ஆவியில் வாழ்வு என்ற உண்மை நிலையின் உணர்வு காலப்போக்கில் கைவிடப்பட்டது. ஆவியின் ஏவுதலால் வழிநடத்தப்பட்டு வந்த திருச்சபை நிறுவனமயமாக்கப்பட்டதுடன் அதிகாரிகளின் திறமையான நிர்வாகத்தினாலும் அதிகாரப் போக்கினாலும் சட்டக் கோவைகளினாலும் வழிநடாத்தப்பட்டு வந்தது. கி. பி. 13ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் மூன்றாம் இன்னசெண்ட் ( Innocent (III)) என்னும் திருத்தந்தை காலத்தில் ( 1198 — 1216 ) திருச்சபை அதுவரை கண்டிராத அதிகாரமும் செல்வாக்கும் கொண்டு விளங்கியது (1) இதனால் திருச்சபைக்கும் தூய ஆவியின் செயற்பாடுகளுக்குமிடையில் உள்ள இடைவெளி அதிகரித்தது. இதன் காரணமாகத் திருச்சபையில் தூய ஆவியின் செயற்பாடுகளில் மந்த நிலை காணப்பட்டது. காரணம் அங்கே ஆவியின் பிரசன்னம் உணரப்படவில்லை. இக்கால கட்டத்தில் அசிசி நகரத்து இளைஞன் பிரான்சிஸ் தூய ஆவியினால் தூண்டப்பட்டான். " திருச்சபை நற்செய்திக்கு ஏற்ப ஏழ்மையில், வெறுமையில் வாழவேண்டும். இறைவனைத் தந்தையாகவும் அனைத்து மக்களையும் சகோதரர்களாகவும் கொண்ட ஒரு தோழமையாக, சமூகமாகத் திகழ வேண்டும் எனும் உண்மையை ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட அசிசியாரது வாழ்வு திருச்சபைக்கு ஒரு சவாலாகி உணர்த்தியது. ஆடம்பரம், அதிகாரம், பணம், செல்வாக்கு இவற்றின் பின்னணியில் பிரான்சிஸ்குவின் ஏழ்மை திருச்சபையை மறுமலர்ச்சிக்கும் புதுவாழ்வுக்கும் அழைக்கும் ஓர் அழைப்பாக அமைத்து, அதற்கு வித்திட்டது," [2] இவ்வாறு தனிமனிதர்கள் வழியாகத் தூய ஆவியின் ஏவுதல் காலத்துக்குக்காலம் திருச்சபைக்குக் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சபை அதிகாரிகள் தங்கள் மேய்ப்புப் பணியை மறந்து உலக ஆடம்பரங்களில் கவனம் செலுத்திய போது தூய ஆவியானவர் சில தனிமனிதர்களைத் தூண்டி எழுப்பியுள்ள உண்மையைத் திருச்சபை வரலாறு எமக்குக் காட்டுகிறது. புனித பெரிய கிறகோரியார் ( Gregory the Great ), சாளமேன் ( Charlemagne ), லூத்தர் ( Luther ) சுவிங்கிலி ( Zwingli ), பிரான்சிஸ் அசிசியார் (Francis of Assisi ), சுவக்கீன் ( Joachine of Floris ) லொயோலா இஞ்ஞாசியார் (Ignatius Loyla) பிரான்சிஸ்கு சவேரியார் ( Francis De Sales ), ஜார்ஜ் (George fox) யோன் வெஸ்லி ( John Wesley ), பில்லி கரகாம் ( Billy Graham ), தோமஸ் மோட்டன் ( Thomas Merton ) ஆகியோர் திருச்சபை வரலாற்றில் புதுப்பித்தலை முன்வைத்தனர். "[3]

இவர்களில் சீர்திருத்தவாதிகளான லூதர், சுவிங்கிலி போன்றோர் திருச்சபையின் அமைப்பு முறைபற்றிப் பல கேள்விகளை எழுப்பினர். இதனால் திருச்சபைக்கும் இவர்களுக்குமிடையே கடும் சொற்போர் மூண்டது. இதன் விளைவாகச் சீர்திருத்தவாதிகள் கடும் எதிர்ப்புக்களுக்கு உள்ளானது மட்டுமல்லாமல் திருச்சபையிலிருந்தும் வெளியேற்றப் பட்டனர். இவ்வாறு திருச்சபையில் இருந்து வெளியேற்றப்பட்டோர் தமக்கென பல சபைகளை நிறுவினர். அதே வேளை சீர்திருத்தவாதிகளின் கேள்விகள் கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளைச் சிந்திக்கவும் தூண்டியது. இதன் வெளிப்பாடாகக் கத்தோலிக்க திருச்சபையில் ஆன்மீக புதுப்பித்தல் பற்றி எடுத்துக் கூறப்பட்டது.

3) புதிய பெந்தக்கோஸ்து:

" முடங்கிக் கிடந்த ஆவியின் செயற்பாடு இரண்டாம் வத்திக்கான் சங்கத்தினூடாகப் புதுப்புது முகங்களை எடுத்தது. இச் சங்கத்தை அமைக்க ஆரம்பத்தில் ஆவியானவர் பல்வேறு இயக்கங்களூடாகச் செயற்பட்டார். சிறப்பாக வேதாகம இயக்கம் (Biblical) Movement ), ஒற்றுமை இயக்கம் ( Ecumenical Movement ) வழிபாட்டு இயக்கம் ( Liturgical Movement ), பொதுநிலைமையினரின் அப்போஸ்தலிக்க இயக்கம் ( Lay Apostolate Movement) இந்த இயக்கங்களே இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்கு அத்திவாரமாக அமைந்தன."[4] இவ்வாறு புதுப்பித்தலுக்காக திருச்சபை தனது கதவுகளைத் திறந்த ஒரு நிகழ்வுதான் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்க அமர்வு ( 1962 — 1965 ). திருச்சபையின் அன்றைய தேவையை ஆவியின் ஏவுதலால் உணர்ந்த திருத்தந்தை 23ஆம் அருளப்பர் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தைக் கூட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் விளைவாக நிறுவனமயமாக இருந்த திருச்சபையில் தூய ஆவியின் புதுப்பித்தல் இடம் பெற்றது. பல எதிர்ப்புக்கள் மத்தியிலும் காலத்தோடு ஒட்டிய தேவைக்கேற்ப புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் கத்தோலிக்க திருச்சபையில் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்க அமர்வு திருச்சபையில் ஏற்பட்ட ஒரு புதிய பெந்தக்கொஸ்து என அழைக்கப்படுகிறது.

## 4) போரின் வடுக்களும் பொது நிலையினரின் புதுப்பித்தலும்

கத்தோலிக்க திருச்சபை அமைப்பில் இருந்த அதிகாரமும் செல்வாக்கும் ஆவியின் புதுப்பித்தலுக்கு உட்படுத்தப்பட்டன. பலர் தமது அதிகார நிலைகளைக் கைவிடமுடியாமல் திருச்சபையில் இருந்து தாமாகவே வெளியேறினர். துறவற மடங்கள் மூடப்பட்டன. குருக்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் அமெரிக்காவும், அமெரிக்க கத்தோலிக்க திருச்சபையும் ஆட்டம் கண்டது.

ஆயுத உற்பத்தியும், நீண்டகாலப் போரினால் ஏற்பட்ட தாக்கங்களும் அமெரிக்க கத்தோலிக்க திருச்சபையில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தியது. இரண்டாம் உலகப்போர் ( 1939 — 1945 ) கொறியாப் போர் ( 1945 — 1950 ) வியட்நாம் போர் ( 1957 — 1975 ) போன்ற நிகழ்வுகள் அமெரிக்க மக்கள் மத்தியில் நீண்ட காலத்துக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்தாக்கம் புதிய தலைமுறையினர் மத்தியில் ஓர் குழப்ப நிலையை ஏற்படுத்தியது. இதனால் எதிலும் திருப்தியற்ற நிலை ஏற்பட்டது.

இந் நிலையைப் போக்கப் பல பொது நிலையினர் முன்வந்தனர். பல இளைஞர்கள் அப்போஸ்தலிக்க பணிக்குத் தூண்டப்பட்டனர். ஆவியின் பிரசன்னம் உணரப்படாத நிலையில் ஆன்மீகத் தாக்கத்தினால் தூண்டப்பட்ட பொது நிலையினரின் செயற்பாடுகள் அதிகரித்தன. ஈடேற்றத்தின் தெய்வீக சக்தியை அனைவரும் அறிந்து பொறுப்புடன் உழைத்தனர். இதனால் கத்தோலிக்க திருச்சபையில் மீண்டும் ஒரு புதுப்பித்தல் ஆரம்பமானது. இப் புதுப்பித்தலுக்குப் பல குருக்களும் ஒத்துழைத்தனர். இந்தப் பின்னணியில் கத்தோலிக்க திருச்சபையில் நவீன பெந்தக்கோஸ்து இயக்கத்தின் அரும்புகளாகப் பல செபக்குழுக்கள் அமெரிக்காவில் தோன்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II அமெரிக்க பின்னணியில் கத்தோலிக்க நவீன பெந்தக் கோஸ்தே இயக்கத்தின் ஆரம்ப நிலை

அமெரிக்காவில் நோத்தர் தாம் ( Notre Dame ) பல்கலைக்கழ கத்திற்கும் டுக்குவேயின் ( Duqueine ) பல்கலைக் கழகத்திற்கு மிடையில் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இத் தொடர்பு நிறுவன ரீதியாகவும், குழுக்களாகவும், இருந்து வந்தது. இப் பல்கலைக் கழகங்களில் செபக் குழுக்கள் இயங்கி வந்தன. இச் செபக் குழுக்களே பெந்தக்கோஸ்து இயக்கத்தின் ஆரம்ப நிலைகளாக இருந்தன. அருங்கொடை இயக்கம் டுக்குவேயின் பல்கலைக் கழகத்தில் ஆரம் பிக்கப்பட்டபோது அதன் உறுப்பினர்கள் தமது புதிய இயக்கம் பற்றிய அனுபவத்தை நோத்தர் தாம் பல்கலைக்கழகத்தில் உள்ள நமது தோழர்களுடன் பரிமாறிக்கொண்டனர். மறுபக்கத்தில் 1967ற்கு முன்ன தாகவே நோத்தர் தாம் பல்கலைக் கழகத்திலும் செபக் கூட்டங்கள் நடைபெற்றன. 1960 களில் வேதாகம வழிபாடுகள், திருவிழிப்பு போன்ற செபக் கூட்டங்கள் நோத்தர் தாம் பல்கலைக் கழகத்தில் இருந்து மற்ற இடங்களுக்கும் பரப்பப்பட்டது, 1963 — 1964களில் இச்செபக் கூட்டங்கள் பட்டதாரி மாணவர்களால் முன்னின்று நடாத் தப்பட்டன. இக்கூட்டங்களில் வேதாகம வாசிப்பு, செபம், பாடல், போன்றவையும், ஞாயிறு தினங்களில் திருப்பலியும் பின்பு உணவு பரிமாற்றமும் நடைபெற்றது.

இக்காலப் பகுதியில் குருசில்லோ ( Cursillo ) இயக்கம் ஸ்ரீபன் கிளார்க் ( Stephen Clerk ) எனும் ஒரு பட்டதாரி மாணவரால் முன் னெடுத்துச் செல்லப்பட்டது. இதனால் தொடர்ந்து ஒரு சில வருடங் களுக்கு உறுப்பினர் மத்தியில் ஆன்மீக வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. இப்புதிய இயக்கத்தின் உறுப்பினர் வாரத்துக்கு ஒரு முறை திருப்பலி ஒப்புக்கொடுக்க நோத்தர் தாம் பல்கலைக்கழகத்தில் பன்ங்போன் ( Pangborn ) சிற்றாலயத்தில் ( Chapel ) ஒன்று கூடுவர் மேலும் வாரத்துக்கு ஒருமுறை ஒன்றுகூடிக் கலந்துரையாடினார்கள்.

ஒருவரையொருவர் ஆன்மீக வாழ்க்கையில் உற்சாகப்படுத்தினார்கள். ஒருவர் ஒருவருக்காகச் செபித்தார்கள் ஆனால் தொடர்ந்தும் இந் நிலை நீடிக்கவில்லை. பலர் இப்புதிய இயக்கத்தைக் கைவிட்டனர். இதேவேளை பல பட்டதாரி மாணவர்கள் வாரத்திற்கு இருமுறை டிலோன் மண்டபத்தில் ( Dillon Hall ) ஒன்றுகூடித் தமது ஆன்மீக வாழ்வைப் பற்றிச் சிந்தித்தனர். 1966 ஆம் ஆண்டு குருசில்லோ இயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தில் ஈடுபாடுள்ள 12 பேர் நோத்தர் தாம் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரியும் போல் டி செலஸ் ( Paul De Celles ) என்பவருடைய இல்லத்தில் வாரம் ஒரு முறை கூடிச் செபித்து வந்தார்கள். இவ்வாறு கத்தோலிக்க நவீன பெந்தக்கோஸ்த்தே இயக்கத்தின் ஆரம்ப நிலையாகப் பல இடங்களில் செபக் குழுக்களே காணப்பட்டன. இக்குழுக்கள் செபிப்பதோடு மட்டுமல்லாமல் கலந்துரையாடல் மேய்ப்புப் பணி, வேதாகம வாசிப்பு, போன்றவற்றிலும் ஈடுபட்டு வந்துள்ளன.

## III. கத்தோலிக்க நவீன பெந்நக்கோஸ்தே இயக்கமும் அதன் கட்டமைப்பும்

### a) வரட்சியும் மலர்ச்சியும்

1966ஆம் ஆண்டு டுக்வேயின் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த இரண்டு பேராசிரியர்கள் தமது பணியில் திருப்தி காணாத நிலையில் தமது பணிகளை ஆன்மீக ரீதியாகவும் மேற்கொண்டனர்; வழிபாடு' ஆன்மீக மேய்புப்பணி போன்ற நிலைகளில் தமது பணிகளைப் பரவலாக்கிச் செயற்பட்டனர். ஆனால் அவர்களுக்குப் பல தோல்விகளும் ஏமாற்றங்களும் தான் கிடைத்தன. ஆரம்பகாலக் கிறிஸ்தவர்கள் வல்லமையோடும் உற்சாகத்தோடும் நற்செய்திப்பணி செய்வதைப் போன்று தம்மால் செய்யமுடியவில்லை என்பதை உணர்ந்தனர். தாமும் ஆதிக்கிறிஸ்தவர்கள் போல் வாழ ஆவல் கொண்டு திருத்தூதர்கள் பணியை ஆழமாகக் கற்றனர். தூய ஆவியின் ஏவுதலாலேயே ஆதிக் கிறிஸ்தவர்கள் உற்சாகத்தோடு பணி புரிந்தனர் என்பதை அவர்கள் இருவரும் உணர்ந்து தூய ஆவியின் ஏவுதலுக்காகச் செபித்தனர். இதனால் அவர்களது சமய, சமூக ஆன்மீக வாழ்க்கையில் பெரும் மாற்றம் கண்டனர்.

தூய ஆவியின் ஏவுதலால் தூண்டப்பெற்ற இவர்கள் ஆவியானவரின் கொடைகளாகிய, பலமொழி பேசுதல், அசுத்த ஆவிகளைத் தேர்ந்து தெளிதல், அசுத்தாவிகளை ஓட்டுதல், நோய்களைக் குணமாக்குதல் போன்றவற்றை நிறைவாகப் பெற்றனர். இதன் விளைவாக 1967 மாசி மாதத்தில் ஒரு சிறிய செபக்குழு உருவாக்கப்பட்டது. சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இச்செபக்குழு வளர்ச்சியடைந்து அன்றிலிருந்து இன்றுவரையும் டுக்வேயின் பல்கலைக் கழகத்தில் இயங்கி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### b) வளர்ச்சியில் தளர்ச்சி

1967 மே மாதம் கோடைகால விடுமுறை ஆரம்பமானபோது 75 – 100 பேர் வரை பெந்தக்கோஸ்தே இயக்கத்தில் ஈடுபாடாய் இருந்தனர். இவர்களுள் பட்டதாரி மாணவர்களும் குருக்களும், துறவிகளும் அடங்குவர். அங்கத்தவர் தொகை குறைந்ததினால் செயற்பாடுகளும் குறைவாகவே காணப்பட்டன. மேலும் விடுமுறை முடிந்து மீண்டும் கல்விக்கூடங்கள் 1967 செப்டெம்பரில் ஆரம்பிக்கப்பட்டபோது மீண்டும் ஒரு மாபெரும் புதுப்பித்தல் நடைபெறும் என்று பலர் எதிர்பார்த்தனர். ஆனால் முதற்கூட்டத்திற்கு 25 பேர் மட்டும் சமூகம் அளித்திருந்தார்கள். இது பலருக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. அங்கத்தவர்களின் குறைவான வரவு பெந்தக்கோஸ்தே இயக்கத்தின் வளர்ச்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பழைய அங்கத்தவர்கள் தமது கல்வியை முடித்துக்கொண்டு தத்தமது இடங்களுக்குச் சென்றுவிட்டார்கள். இன்னும் பலர் தாமாகவே விலகிக்கொண்டார்கள். சிலர் தமது சிநேகிதர்களால் தடுக்கப்பட்டனர். இப்படிப்பட்ட பின்னடைவுகளால் செபக்கூட்டங்களை முன்னின்று நடத்தும் திறன் கொண்டவர்கள் மிகவும் அரிதாகவே இருந்தனர். மேலும் அங்கத்தவர்களுக்கு ஆவியின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்புக் கொடுப்பது எப்படி என்பதில் தெளிவின்மை காணப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அவர்களிடத்தில் தூரநோக்கும், ஒழுங்கமைப்பும் குறைவாக இருந்தது. இத்தகைய காரணங்களால் நோத்தர் தாம் பல்கலைக் கழகத்தில் பெந்தகோஸ்தே இயக்கத்தின் வளர்ச்சி 1967–1969 வரை தளர்ச்சியடைந்து காணப்பட்டது.

## IV. ஏனைய சபைகளுடனான தொடர்பு.

ஆரம்பத்தில் கத்தோலிக்க திருச்சபையில் தூய ஆவியின் கொடைகளை நிறைவாக அனுபவிக்க முடியாது என்ற கண்ணோட்டம் மற்றய சபைகளிடம் காணப்பட்டது. ஏன் கத்தோலிகர்களும் கூட அவ்வாறான எண்ணமே கொண்டிருந்தனர். ஏனெனில் கத்தோலிக்க திருச்சபை நிறுவன மயப்படுத்தப்பட்டு, அதிகாரத்தினாலும் சட்டதிட்டங்களினாலும், செல்வாக்கினாலும், வழிநடத்தப்பட்டு வந்தது. ஆனால் கத்தோலிக்கர் தூய ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டு பல மொழிகளில் பேசிய பொழுது ஏனைய கிறிஸ்தவ சபையினர் வியப்புற்றனர். கத்தோலிக்க நவீன பெந்தக் கோஸ்தே இயக்கத்தின் வளர்ச்சி மற்றைய பெந்தக்கோஸ்தே சபைகளுக்குப் பெரும் சவாலாக அமைந்தது. ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரமும் சட்டதிட்டங்களும் அமைப்பு முறைகளும் ஆவியின் செயற்பாட்டினால் ஆட்கொள்ளப்பட்டன. இதனால் கத்தோலிக்க திருச்சபையில் பெந்தக்கோஸ்தே இயக்கத்தின் வளர்ச்சிப் போக்கு மற்றைய சபைகளை விட விரைவாகக் காணப் பட்டது. ஏனைய திருச்சபையினர் வியந்து நோக்குமளவுக்கு வளர்ச்சி காணப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையின் தலைவர்களும் திறந்த மனத்துடன் இப்புதிய இயக்கத்திற்கு உற்சாக மூட்டினர். இவ்வியக் கம் மிகவும் அமைதியாகவும் திறமையாகவும் பரவத் தொடங்கியது. இதனால் பெந்தக் கோஸ்தே இயக்கத்தை ஏற்றுக்கொண்ட கத்தோலிக் கர் அதில் மூழ்கித் தமது வாழ்க்கையைப் புதுப்பித்தனர்.

தூய ஆவியின் செயற்பாடுகளைப் பற்றி மேலும் அறிவதற்காக பெந்தக் கோஸ்தே சபையினர் நோத்தர் தாம் குழுவினருடன் கலந்துரை யாடல்களை தமது ஆலயங்களில் நடாத்தினர். அதே நேரத்தில் பெந்த கோஸ்தே சபையினர் நோத்தர் தாமில் நடைபெற்ற செபக் கூட்டங்களிலும் பங்குபற்றினர், பெந்த கோஸ்தே சபையினர் பலருக்கு நோத்தர் தாம் குழுவினரின் செயற்பாடுள் வியப்பாக இருந்தது. பலர் கத்தோலிக்க திருச்சபையில் ஆவியின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண் டனர், பெந்தக்கோஸ்தே சபையினரின் வருகை பல கத்தோலிக்கர் களுக்குத் திருப்தியாக அமையவில்லை. கலந்துரையாடல்களில் கருத்து மோதல்கள் ஏற்பட்டன. இதனால் கூட்டங்களில் கலந்துரையாடல் தவிர்க்கப்பட்டு செபங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது இதனால் கொள்கை வேறுபாடுகள் இருந்த போதிலும் இயேசுவில் எல்லோரும் சகோதரர்களாகச் செபித்தனர். இவ்வாறாக கிறீஸ்தவ ஒன்றிப்புக்கான பண்புகளும் ஆங்காங்கே மிளிரத் தொடங்கின.

காலஞ் செல்லச் செல்ல "பெந்தக் கோஸ்தே இயக்கம் என்ற சொற்பதம் மாறி " அருங்கொடை இயக்கம் " என அழைக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டிற்குப் பின்னர் கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்து சபை யினரும், மேற்கூறிய சொற்பதங்களை ஏற்றுக்கொண்டனர். வரலாற் றுக் கண்ணோட்டத்தில் பார்க்கும்போது "பெந்தக் கோஸ்தே இயக்கம்' எல்லாக் கிறிஸ்தவ சபைகளிலும் ஒரு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. என்பது பலர் அறிந்த உண்மை.

## முடிவுரை:-

திருச்சபையின் வாழ்வில் உறவுகளில், அதிகாரத்தில் நிர்வாகத்தில் ஏன் செயற்பாடுகள் அனைத்திலுமே ஆவியின் பிரசன்னம் ஊடுருவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருப்பதை நாம் ஆதித் திருச்சபையின் வாழ்விலிருந்து இன்றுவரையி லான திருச்சபையில் காண்கின்றோம். தூய ஆவியானவர் திருச்சபை யின் உயிர் மூச்சாகத் திகழ்கின்றார். தூய ஆவியானவர் செபக்குழுக்கள் பெந்தக்கோஸ்தே இயக்கங்கள் ஊடாக திருச்சபையிலே ஒரு புதுப்பித் தலை ஏற்படுத்துகின்றார். கத்தோலிக்க பெந்தக் கோஸ்தே இயக்கத் தின் வரலாற்றைப் பார்க்கும்போது தூய ஆவியானவர் எவ்வாறு திருச்சபையினுள்ளே ஊடுருவிச் செயற்படுகின்றார் என்பது தெளி வாகின்றது.

கத்தோலிக்க பெந்தக் கோஸ்தே இயக்கங்கள் திருச்சபையைப் புதுப்பிக்கின்ற புளிக்காரங்களாகச் செயற்படுகின்றன. அதனாற்தான் வரலாற்றில் பல தளர்ச்சிகளைக் கண்டபோதும் மீண்டும் தம்மைப் புதுப்பித்து திருச்சபைக்கு வாழ்வு கொடுக்கின்ற இயக்கங்களாக செயற்படுகின்றன. இந்த வகையில் கத்தோலிக்க நவீன பெந்தக் கோஸ்தே இயக்கத்தின் வரலாற்றை ஆய்வு செய்யும்போது திருச் சபைக்கு உள்ளேயும் வெளியேயும் அதன் முக்கியத்துவம் இன்றியமை யாத தொன்றாகக் காணப்படுகின்றது.

ஆக்கம் சகோ. பா. பி. இராஜசிங்கம்
4ஆம் ஆண்டு இறையியல்.

## அடிக்குறிப்புக்கள்

1. பெலிக்ஸ் வில்பிரெட் "மறை அருவி" ஆவியை அணைத்துவிட வேண்டம். திருச்சி, இந்தியா, 1983, ஏப்ரல் – யூன். பக். 55
2. பெலிக்ஸ் வில்பிரெட் "மறை அருவி" ஆவியை அணைத்துவிட வேண்டாம், திருச்சி, இந்தியா, 1983 ஏப்ரல் – யூன். பக். 36
3. Kevin and Dorathy Ranagham. Catholic Pentecosatls Paulist Press, New york, 1969. P. 250.
4. இம்மானுவேல் எஸ். ஜே. "இறையியல் கோலங்கள்" திருச் சபையில் பரிசுத்த ஆவி. யாழ்ப்பாணம், இலங்கை. 1994. புரட்டாதி, பக். 16.
5. Edward O. O' Connor, The Pentecostal Movement in the Catholic Church. Ave Maria Press, Notre. Dame. 1974. P. 16 – 17.
6. Ibid; p. 19.
7. Ibid; P. 19 – 20.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Bro. P. F. Rajasingam**

# THE DEVELOPMENT OF THE NEW PENTECOSTAL MOVEMENT

## ( Synopsis )

In the beginning the whole church became a movement of the Pentecost. The Holy Spirit has been the source of renewal in the church When the church became more and more institutionalized it began to lose the grip of the Holy Spirit.

From time to time the Holy Spirit has been moving certain individuals to be prophets of renewal in the church, The reformers became a challenge of renewal in the catholic church.

The second Vatican Council was a hallmark to make the church realize more of its charismatic character than that of the iustitution. The spirit of service became the priority more than the authority.

In the United States of America the cause of renewal was initiated by the charismatic prayer groups of Notre Dame and Duquaine Universities In 1967 two professors of the above universities took interest in forming charismatic renewal groups. However they faced many challenges and problems.

The new Pentecostal Movement in the catholic church became a threat to the fundamentalist groups. The Pentecostal movement is also called the Charismatic Movement.

---

" தூய ஆவி ஒருவனுக்குள் வரும்போது
அவனது வாழ்வு புத்துரு பெறுகிறது.
புதியதோர் ஆற்றல், புதிய திறமை
புதிய அன்பு, புதிய மகிழ்ச்சி, புதிய அமைதி
அவனுக்குள் வருகிறது. "

- பில்லி கிரகாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புமிக்க வாசர்களே!

எமது குருமடம் யாழ் மண்ணின் புலப்பெயர்வுடன் கிளிநொச்சியிலும், மடு அன்னையின் யாத்திரைத் தலத்திலும் குருத்துவப் பயிற்சியை மேற்கொண்டமையினால் கடந்த மூன்று வருடங்களாக எமது காலாண்டு சஞ்சிகையான "இறையியல் கோலங்கள்" இறையியல் ஆக்கங்களை வெயிட முடியாமற் போனதையிட்டு வருந்துகின்றோம். மீண்டும் இவ்வருடத்தில் எமது "இறையியல் கோலங்கள்" சஞ்சிகையை புதிய முனைப்புடன் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். மேலும் எமது சஞ்சிகையின் முன்னை நாள் ஆசிரியர், அருட்திரு எஸ் ஜே. இம்மானுவேல் அடிகளாரிற்கு எமது சஞ்சிகை உளம் கனிந்த நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து நிற்கின்றது.

உங்கள் ஆதரவையும் ஊக்குவிப்பையும் எதிர்பார்க்கின்றோம் உங்கள் விமர்சனங்கள், எதிர்பார்ப்புக்களிற்கு நாம் என்றும் திறந்த மனத்தவர்களாக இருக்கின்றோம்.

❋ ❋ ❋

ஓர் ஆண்டுச் சந்தாவாக ரூபா 80/- ஐ தபாற்கட்டளை மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது உங்கள் பங்குத்தந்தையர்கள் மூலமாகவோ எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் சந்தா பற்றிய விபரங்களை நாம் இழந்துவிட்டதால் உங்கள் பெயர், முகவரி போன்ற விபரங்களுடன் உங்கள் சந்தாவை அனுப்பி வையுங்கள். இயலுமான வரை எங்கள் பழைய, புதிய வாசர்களிற்கு எமது சஞ்சிகையின் புதிய வரவு பற்றித் தெரியப்படுத்துங்கள்.

உங்கள் தொடர்பு முகவரி :

**'இறையியல் கோலங்கல்'' ஆசிரியர்**
புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறையியல் கோலங்கள்

ஆண்டுச் சந்தா (அஞ்சல் செலவு உட்பட): ரூபா. 80/-
தனிப்பிரதி ரூபா 25/-

தொடர்பு கொள்க:

''இறையியல் கோலங்கள்''
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# Irai - Iyal Kolangal

A Tamil Theological Quarterly
Annual subscription (incl. postage within Sri Lanka): Rs. 80/-
Single Copy - Rs. 25/-

Subscription and correspondance to:

# Irai - Iyal Kolangal

St. Francis Xavier's Seminary,
Columbuthurai,
Jaffna.
Sri Lanka.

புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org